# தமிழர் பொருண்மியம்

வாரமலர்

TAMILS ECONOMY

விலை - 100/=

இதழ் - 44

15.11.2023


# சர்ச்சையை உருவாக்கிய தபால் நிலைய விற்பனை?



மட்டக்களப்பில் பொருளாதாரத்தின் மூன்று தூண்கள்! 02

தையல் ஊசியையும் நூலையும் கொண்டு சிகரம் தொட்ட பெண் 12

நம்மை நாம் ஒரு பிராண்டாக வளர்த்தெடுப்பது எப்படி? 18










தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ... 04



# மட்டக்களப்பில் பொருளாதாரத்தின் மூன்று தூண்கள்!



- பா.அரியநேத்திரன் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்தை ஈடு செய்யக்கூடிய மூன்று தூண்களாக விவசாயமும், கால்நடை வளர்ப்பும், மீன்பிடித்தொழிலும் உள்ளன.

பொதுவாக வடக்கு கிழக்கு மாகாணத்தின் தன்னாதிக்கமுள்ள உற்பத்தித் துறையாக விவசாயத்துறை விளங்குகின்றது. இவ்விரு மாகாணங்களினதும் பொருளாதாரத்தில் 15 சதவீதமான பங்களிப்பை விவசாயத்துறை வழங்கிவருவதுடன் 65 சதவீதமானோர் வாழ்வாதாரத்திற்கு தங்கியிருக்கும் துறையாகவும் இது செயற்பட்டு வருகின்றது.

இதில் கிழக்கு மாகாணத்தை மட்டும் பார்போமானால் பொருளாதாரத்தில் நெற்செய்கை முதல் நிலையிலும், கால்நடை வளர்ப்பு இரண்டாம் நிலையிலும், மீன்பிடித்தொழல் மூன்றாம் நிலையலும் உள்ளது.

மீன்பிடித்தொழலில் மூன்று விதமான மீனவர்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ளனர் கடல்தொழில் மீன்பிடிப்பாளர்கள், வாவியில் மீன்பிடிப்பாளர்கள், குளத்தில் மீன்பிடிப்பாளர்கள் என மூன்று சாரார் கிழக்கு மாகாணத்தில் மீன்பிடித்தொழிலை மேற்கொண்டு வழுவதைக் காண லாம்.

நிலப்பாவனை என்ற வகையில் விவசாயச் செய்கைக்காக கிழக்கு மாகாணத்தில் 42 சதவீதமான நிலப்பரப்புப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்விரு மாகாணங்களின் பிரதான விவசாயப் பயிராக நெல்லே காணப்படுகின்றது. கிழக்கு மாகாணத்தில் 324,455 ஹெக்டெயர் நிலப்பரப்பிலும் மொத்தமாக காலபோகம், (பெரும்போகம்) சிறுபோகம் ஆகிய இரு போகங்களிலும் பயிர்ச்செய்கை இடம் பெறுகிறது.

2020/2021, காலபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் 1,045,159.5 மெற்றிக்தொன் விளைச்சல் பெறப்பட்டதுடன் 2022 சிறுபோகத்தில் கிழக்கு மாகாணத்தில் 578,500.6 மெற்றிக்தொன் நெல்லும், விளைச்சலாக பெறப்பட்டது. இவ்வகையில் நெல் உற்பத்தியின் முதன்மை மாகாணமாக கிழக்கு மாகாணம் இருந்து வருவதுடன் இரு பருவங்களிலும் செய்கை பண்ணக்கூடிய நிலம், நீர் மற்றும் காலநிலை சூழல் காணப்படும் பிரதேசமாகவே கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது. சிலவேளை மூன்று போகங்களும் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நெற்செய்கை செய்வதையும் காணலாம்.

நெல் விவசாயத்தின் முதன்மைத் தன்மை காரணமாக கிழக்கு மாகாணத்தில் பிரதான செயற்பாட்டு வளங்களான நன்கு பயன் தரும் நிலங்களும் இருபோக பயிர்ச் செய்கையில் ஈடுபடும் மனிதவளம், நீர் என்பனவும் முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஏனைய துறை வளங்களான இயந்திரங்கள், நிதி ஆகிய



**மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடித்தொழில் மூன்றுமே மிகமுக்கியமான வருமானத்தை ஈட்டும் வளங்களாக காணப்பட்டாலும் மூன்று தொழில்களையும் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத கெடுபிடிகளும் தடைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.**

வாழ்வாதார வளங்களும் பயன்படுத்தக் கூடியனவாக அமைகின்றன. இந்த நிலையில் இருபோக பருவத்திலும் இயற்கையாக மழை மூலம் கிடைக்கும் நீர் மற்றும் குளங்களில் சேகரிக்கப்பட்ட நீர் வாய்ப்பான உற்பத்தி துறை மீது பயன்படுத்தப்படுகிறதா என்ற வினாவை எழுப்ப முடியும். மாறாக இந்த வரண்ட வலயத்தில் சேகரிக்கப்படும் நீரினை மாற்றுப் பயிர்ச்செய்கையான மேட்டு நிலப் பயிர்களிலோ, அவரையினப் பயிர்களிலோ சோழன், பயறு, உழுந்து போன்ற பயிர்செய்கையும் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் படுவான்கரை பெருநிலத்தில் தானியப் பயிர்ச்செய்கை நடைபெற்று வருவதை காணலாம். இதன் முதலீட்டால் அதன் மூலம் கிடைக்கும் இலாபம் அதிகமானதே என்ற உண்மையையும் மறுப்பதற்கில்லை.

நெற்செய்கை என்பது கிழக்கு மாகாணங்களிலும் விவசாயிகளினால் விருப்பத்துடன் பயிரிடப்பட்டாலும் பெரிய பரப்பான நிலத்திலும் சேர்க்கப்படும் நீரினதும் பயன்பாடு திருப்தியாக இல்லை எனக் குறிப்பிடலாம். உதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கான சராசரி விளைச்சல் 90 புசல்களாக காணப்படுமாயின் கிழக்கு மாகாணத்திலும் மொத்தமாக செய்கை பண்ணப்படும் 324,455 ஹெக்டயரில் 1,045,159.5 மெற்றிக்தொன் நெல் உற்பத்தி மேலும் அதிகரிக்கப்படவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் கால்நடைத் துறையின் பிரதான பங்கை வகிக்கும் துறையாக மாடுவளர்ப்புக் காணப்படுகின்றது. அதிலும் பண்ணை முறை வளர்ப்புக்குப் பதிலாக திறந்தவெளி மாடு வளர்ப்பே பிரதான இடத்தைப் பெறுகிறது. தரிசாக விடப்பட்டுள்ள நிலங்களிலும் ஒதுக்கீட்டு நிலங்களிலும் மேய்ச்சலுக்காக திறந்த முறையில் வளர்க்கப்படும் மாடுகள், அதிகளவில் பாரம்பரிய இனங்களாகவும் உள்ளூார் வர்க்கங்களாகவும் எருமை, பசு மாடுகள் காணப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் பால் உற்பத்தியில் பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் , பால்உற்பத்தி

(21ஆம் பக்கம் பார்க்க)



மின்மடல் : tamilseconomy@gmail.com
தொலைபேசி : 0764438620

## மின்சாரக் கட்டணம்

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளையையேற்று மின்சாரக் கட்டணத்தை அரசாங்கம் மீண்டும் அதிகரித்திருக்கின்றது. கடனைப் பெறுவதற்காக இவற்றைச் செய்யும் அரசாங்கம், இதனால் மக்கள் கடனாளிகளாவதையிட்டுக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

மின் கட்டண உயர்வு சாதாரண மக்களுக்கு, குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதிகரித்த மின் செலவு ஏற்கனவே இறுக்கமானதாகவுள்ள அவர்களின் வரவு – செலவுத் திட்டத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளை அவர்கள் பெற்றுக் கொள்வதை மிகவும் கடினமாக்கும்.

ஒரு வருடத்துக்குள் மூன்றாவது தடவையாக மின் கட்டணம் அதிகரித்துள்ளது. மின் செலவின் அதிகரிப்பு சாதாரண மக்களின் ஏற்கனவே அதிகரித்துள்ள அன்றாட வீட்டுச் செலவுகளை மேலும் அதிகரித்துள்ளது. இது அவர்களின் அவசியமான தேவைகளை பூர்த்தி செய்வதைக்கூட மிகவும் கடினமாக்கியுமுள்ளது. உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற பிற அத்தியாவசிய தேவைகளுக்கான செலவுகளை குறைக்க அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு கடனை எடுக்க வேண்டிய கட்டாயம் கூட சாதாரண மக்களுக்கு ஏற்படலாம். இது கடனின் தீய சுழற்சிக்கு வழிவகுக்கும், ஏனெனில் அவர்கள் தங்கள் கடன்களுக்கு வட்டி செலுத்த வேண்டியிருக்கும். அது பெருகிக்கொண்டே செல்லும். இதனால், தமது தேவைகளை நிறைவேற்ற முடியாது திண்டாடும் நிலைக்கு சாதாரண மக்கள் தள்ளப்படுவார்கள்.

மின் கட்டண உயர்வு வர்த்தகத் துறையையும் பாதிக்கும். வர்த்தக மற்றும் உற்பத்தித்துறையினர் தமது பொருட்களின் விலைகளை அதிகரிக்க நிர்ப்பந்திக்கப்படுவார்கள். இது நுகர்வோருக்குச் செலவினங்களில் அதிகரிப்பை ஏற்படுத்தும். பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான அதிக விலைகளுக்கு வழிவகுக்கும். சாதாரண மக்களின் வரவு செலவுத் திட்டத்தில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மானியம் வழங்குவது போன்ற சாதாரண மக்களுக்கு மின்சாரக் கட்டண உயர்வின் பாதிப்பைக் குறைக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இருப்பினும், உயர்வின் முழுப் பாதிப்பையும் ஈடுகட்ட இந்த நடவடிக்கைகள் போதுமானதாக இருக்குமா என்பது சந்தேகத்துக்குரியதுதான்.

மின்சாரக் கட்டண உயர்வானது, சாதாரண மக்கள் மீது கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தும். அதிகரித்த மின்சாரச் செலவு அவர்களின் வரவு–செலவுத் திட்டங்களைக் குறைக்கும். அவர்களின் செலவழிப்பதற்கு இருக்கக்கூடிய வருமானத்தைக் குறைத்து, அவர்களின் கடன் சுமையை அதிகரிக்கும். இந்த தாக்கத்தை சமாளிக்க குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களுக்கு அரசு தொடர்ந்து ஆதரவை வழங்குவது முக்கியம்.

# அன்புள்ள ஆசிரியருக்கு....



### பட்ஜெட் எதிர்வுகூறல்

கடந்த வாரம் நீங்கள் வெளியிட்டிருந்த பட்ஜெட் குறித்த கட்டுரை சிறப்பானதாக இருந்தது. வரப்போகும் பட்ஜெட் எவ்வாறானதாக அமையும் என்பதையிட்டு உங்களுடைய எதிர்வுறல்களை அதில் தந்திருந்தீர்கள். குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் ரணில் எதிர்கொண்டிருக்கும் சவால்கள் குறித்த உங்கள் பார்வை சிறப்பானதாக முன்வைக்கப்பட்டிருந்தது. தேர்தல்களுக்காக மக்களை கவர்வதாக பட்ஜெட் அமையுமானால், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களையிட்டு விளக்கியிருந்தமையும் சிறப்பு.

**நந்தகோபால் வேல்முருகன், யாழ்ப்பாணம்.**

### செவ்விளநீர் ஏற்றுமதி

செவ்விளநீர் ஏற்றுமதி மூலமாக இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலாவணி கிடைப்பதாக கடந்த வாரம் நீங்கள் வெளியிட்ட கட்டுரை ஒன்றில் வெளிப்படுத்தியிருந்தீர்கள். உண்மையில் இது நல்லதொரு விடயம். தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலும் கலாசார ரீதியாகவும், மருத்துவத் தேவைகளுக்காகவும் செவ்விளநீர் அதிகளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. இருந்த போதிலும் ஒரு வர்த்தக ரீதியாக இது வளர்த்தெடுக்கப்படுகின்றதா என்பது தெரியவில்லை. வெளிநாட்டு சந்தை வாய்ப்பு அதிகமாக இருப்பதால், திட்டமிட்ட முறையில் இதனை உற்பத்தி செய்வதன் மூலமாக அதிக இலா பத்தை எம்மவர்கள் பெற முடியும்.

**பராசக்தி பரமன், சாவகச்சேரி.**

**தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வர ...**

சந்தாதாரராகுங்கள்!

* **மூன்று மாதங்களுக்கு 1900 ரூபா தபால் செலவு உட்பட**
* **ஆறு மாதங்களுக்கு 3800 ரூபா தபால் செலவு உட்பட**

சந்தாத் தொகையை **Green media House (Pvt) Ltd** என்ற பெயரில், **HNB Bank - Jaffna Metro branch - 016010023281** கணக்கு இலக்கத்துக்குச் செலுத்தி, அதற்கான பிரதியுடன் கீழேயுள்ள படிவத்தையும் நிரப்பி வாட்ஸ்அப் மூலமாகவோ தபால் மூலமாகவோ அனுப்பி வையுங்கள்.

மறு வாரத்திலிருந்து தமிழர் பொருண்மியம் உங்கள் வீடு தேடி வரும்!

அனுப்பிவைக்க வேண்டிய முகவரி -
Green media House (Pvt) Ltd,
68, crossette lane, Jaffna.

**வாட்ஸ் அப், வைபர் இலக்கங்கள் - 0777 276 949**

------------------------------------------------------------

**தமிழர் பொருண்மியம் - சந்தாப் படிவம்**

**பெயர்** - ------------------------------------------------
**முகவரி** - ------------------------------------------------
**தொலைபேசி இலக்கம்** - ----------------------------------
**சந்தாக் காலம்** - ----------------------------------------
**செலுத்திய தொகை** - ------------------------------------
**செலுத்திய திகதி** - ---------------------------------------




**இலங்கையில் 22 கரட் (ஒரு பவுண்) தங்கத்தின் சந்தை விலை 1,66,200 ரூபா.**

**24 கரட் தங்கம் 1,81,250 ரூபாவுக்கு நேற்றைய தினம் விற்பனை செய்யப்பட்டது.**




| | |
|---|---|
| கத்தரிக்காய் | - 350/= |
| உருளைக்கிழங்கு | - 200/= |
| பச்சைமிளகாய் | - 600/= |
| தக்காளி | - 280/= |
| மரவள்ளிக்கிழங்கு | - 140/= |
| கோவா | - 350/= |
| கரட் | - 350/= |
| பூசணி | - 120/= |
| புடோல் | - 250/= |
| வாழைக்காய் | - 600/= |
| சின்ன வெங்காயம் | - 380/= |
| பெரிய வெங்காயம் | - 300/= |
| பாகற்காய் | - 650/= |
| வெண்டிக்காய் | - 240/= |
| கருணைக்கிழங்கு | - 160/= |
| பயற்றங்காய் | - 600/= |
| லீக்ஸ் | - 250/= |
| பீற்றூட் | - 140/= |
| கறிமிளகாய் | - 500/= |
| முருங்கைக்காய் | - 450/= |
| போஞ்சி | - 450/= |



# கேளுங்கள் தரப்படும்

**கேள்வி** - கடலட்டைப் பண்ணைகள் மூலமாக வடக்கில் பல மீனவர்கள் அதிகளவுக்கு லாபம் பெறுகின்றார்கள். அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தருகின்றார்கள். அவ்வாறிருக்க இதனை ஏன் எதிர்க்க வேண்டும்?

**தர்சினி சிவம்**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**பதில்** - நீங்கள் குறிப்பிட்டதில் உண்மை இருக்கின்றது. அவர்கள் வருமானம் பெறுகின்றார்கள்தான். ஆனால், இந்த வருமானம் நிரந்தரமானதாக இருக்குமா என்பதுதான் முதலாவது பிரச்சினை. சுமார் 10-15 வருடங்களுக்கு முன்னர் இது போலத்தான் புத்தளம் சிலாபம் போன்ற பகுதிகளில் பாரியளவில் நன்னீர் இறால் வளர்ப்பு பிரபலமடைந்திருந்தது. இன்று அனைத்தும் மூடப்பட்டுவிட்டன. செயற்கையாக சிலவற்றை செய்யும் போது அவை நிரந்தரமாக இருக்குமா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இரண்டாவது, கடலட்டைப் பண்ணைகளுக்காக கடற்கரையோரங்கள்தான் பயன்படுத்தப்படுகின்றது. இதனால், எம்மவர்கள் பாரம்பரியமான மீன்பிடித்து வந்த கரையோரங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. அதாவது, எமது கரையோர மீன்பிடி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இதனால், கரையோர மீன்பிடியை நம்பி வாழ்ந்த மீனவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். மறுபுறத்தில் சந்தையில் மீன்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயர்கின்றது. இது சாதாரண மக்களின் போஷாக்கு நிலையைப் பாதிக்கின்றது.



மூன்றாவதாக, மீன்கள் கருக்கட்டுவதற்காக அதிகளவுக்கு கரையோரப் பகுதிகளுக்குத்தான் வருகின்றன. கடலட்டைப் பண்ணைகளுக்காக அந்தப் பகுதிகள் தடுக்கப்பட்டிருப்பது மீன்களின் இனப் பெருக்கத்தைப் பெரிதும் பாதிக்கின்றது. இது எதிர்காலத்தில் மீன்களின் இருப்பையே இல்லாமலாக்கி விடலாம். அத்துடன், கடலட்டைப் பண்ணைகளின் பாதுகாப்புக்காக அந்தப் பகுதிகளில் மின்னொளி பாய்ச்சப்பட்டிருப்பதும் மீன்களின் இயற்கையான பெருக்கத்துக்குத் தடையாக இருக்கின்றது. எதிர்காலத்தில் மீன்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இதனால் ஏற்படலாம்.

கடலட்டைப் பண்ணைகளை அமைப்பவர்கள் பாரம்பரியமான மீன்பிடிக்கும் பகுதிகளைவிட்டு விலகி, வேறு இடங்களில் அவற்றை அமைப்பார்களாயின் இந்தப் பிரச்சினையைப் பெருமளவுக்குத் தீர்க்கக் கூடியதாக இருக்கும். அவர்களும் தமது வருமானத்தைப் பாதிக்காத வகையில் தொழிலைச் செய்ய முடியும். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களுடனும், நிபுணத்துவம் பெற்றவர்களுடனும் உரையாடல்களை நடத்தி உறுதியான தீர்வு ஒன்று முன்வைக்கப்படுவது மிக அவசியம். கடற்தொழில் அமைச்சர் இதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து அதனை கடுமையாக நடைமுறைப்படுத்தினால், எந்தத் தரப்பும் பாதிக்கப்படாமல் தொழில் செய்யக் கூடியதாக இருக்கும் என்பதே எது கருத்து!

## கேளுங்கள் தருகின்றோம்

தமிழர் பொருணமியம் வாசகர்கள் பொருளாதாரம் உட்பட அதனுடன் தொடர்புபட்ட தங்களுடைய கேள்விகளை - சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைக்கலாம். அடுத்த வாரம் முதல் அதற்கான களம் திறக்கப்படுகின்றது. உங்கள் கேள்விகளை அனுப்பிவைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி -
tamilseconomy@gmail.com




**வாங்கும் விலை**

| | |
|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் - | 206/= |
| கனடா டொலர் - | 232/= |
| சீன யுவான் - | 44/= |
| யுரோ - | 343/= |
| ஜப்பான் யென் - | 2.1/= |
| சிங்கப்பூர்டொலர் - | 236/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 395/= |
| சுவிஸ் பிராங் - | 355/= |
| அமெரிக்க டொலர் - | 322/= |

**விற்கும் விலை**

| | |
|---|---|
| ஆஸ்திரேலியன் டொலர் - | 216/= |
| கனடா டொலர் - | 243/= |
| சீன யுவான் - | 46/= |
| யுரோ - | 358/= |
| ஜப்பான் யென் - | 2.2/= |
| சிங்கப்பூர் டொலர் | 247/= |
| ஸ்ரேலிங் பவுண் - | 410/= |
| சுவிஸ் பிராங் - | 372/= |
| அமெரிக்க டொலர் - | 333/= |



- அகிலன் -

# சர்ச்சையை உருவாக்கிய தபால் நிலைய விற்பனை?

இலங்கையின் பாரம்பரியத்தின் அடையாளங்களில் ஒன்றாக விளங்கும் நுவரெலியா பிரதான தபால் நிலையத்தின் கட்டடத்தை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் கடுமையான எதிர்ப்பை உருவாக்கியிருக்கின்றது. அரசாங்கம் தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஓர் உபாயமாக இந்த முடிவை எடுத்திருக்கின்றது. இலங்கையிலுள்ள பிரபல ஹொட்டல் நிறுவகம் ஒன்று இதனைக் கொள்வனவு செய்வதற்குத் தயாராக இருப்பதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

நுவரெலியா பிரதான தபால் நிலையத்தை விற்பனை செய்வது குறித்து ஆராய்வதற்கான இலங்கை அரசாங்கத்தின் முடிவு, நாட்டின் முன்னுரிமைகள் மற்றும் அதன் பாரம்பரியத்தின் மதிப்பு பற்றிய விவாதத்தைத் தூண்டியுள்ளது. பிரித்தானிய காலனித்துவ காலத்தில் 1894 இல் கட்டப்பட்ட இந்த சின்னமான தபால் அலுவலகம், இலங்கையின் வளமான வரலாறு மற்றும் கட்டிடக்கலை மரபுக்கு சான்றாக இன்றும் கம்பீரமாக உள்ளது.

எவ்வாறாயினும், பெருகிவரும் நிதி சிக்கல்களை எதிர்கொண்டு, இந்த தேசிய பொக்கிஷத்தைப் பாதுகாப்பது குறித்த கவலைகளை எழுப்பி, தனியார் முதலீட்டாளர்களுக்கு கட்டிடத்தை விற்க அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. அரசாங்கத்தின் இந்த முடிவுக்கு எதிராக தபால் ஊழியர்கள் போராட்டத்தை ஆரம்பிக்க, தபால் சேவையை அத்தியாவசிய சேவையாக அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கின்றது.

### அழகிய நகரில் பாரம்பரிய கட்டடம்

இலங்கையின் மத்திய மலைநாட்டின் பசுமையான மலைகள் மற்றும் அழகிய நிலப்பரப்புகளுக்கு மத்தியில் நுவரெலியா நகரம் அமைந்துள்ளது, இது காலனித்துவ வசீகரம் மற்றும் மயக்கும் இயற்கை அழகுக்கு பெயர் பெற்றது. இந்த அழகான நகரத்தின் மையத்தில் கடந்த காலத்தின் ஒரு பெரிய கட்டிடக்கலை நினைவுச்சின்னம் உள்ளது, நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகம், நகரத்தின் வளமான வரலாறு மற்றும் நீடித்த பாரம்பரியத்திற்கு சான்றாகும்.

1894 ஆம் ஆண்டில், பிரித்தானிய காலனித்துவ காலத்தில், நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகம் பிராந்தியத்தில் தகவல் தொடர்பு மற்றும் இணைப்பின் கலங்கரை விளக்கமாக வெளிப்பட்டது. தனித்துவமான டியூடர் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்ட இந்த கட்டிடம், அதன் சிவப்பு செங்கல் சுவர்கள் மற்றும் கடிகார கோபுரம் ஆகியவை வானத்தை நோக்கி அழகாக உயர்ந்துகொண்டிருந்தன

தபால் அலுவலகம் விரைவில் நகரத்தின் சமூக கட்டமைப்பின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியது, தபால் சேவைகள் மற்றும் சமூகக் கூட்டங்கள் ஆகிய இரண்டிற்கும் ஒரு மையமாக செயல்படுகிறது. கடிதங்களைப் பரிமாறிக் கொள்ளவும், தொலைதூர நாடுகளில் இருந்து செய்திகளைப் பெறவும், சக குடியிருப்பாளர்களுடன் கலகலப்பான உரையாடலில் ஈடுபடவும் உள்ளூர் மக்கள் தபால் நிலையத்திற்கு திரண்டனர்.

பல ஆண்டுகளாக, நுவரெலியா பிரதான தபால் அலுவலகம் வரலாற்றின் வீழ்ச்சியையும் ஓட்டத்தையும் கண்டது, நகரம் காலனித்துவ புறக்காவல் நிலையத்திலிருந்து பிரபலமான சுற்றுலா தலமாக மாறப்படுவதை அமைதியாகக் கவனித்து வந்தது. அதன் சுவர்கள் பயணிகள், வணிகர்கள் மற்றும் சாதாரண குடிமக்களின் கதைகளுடன் எதிரொலித்தன, ஒவ்வொன்றும் கட்டிடத்தின் பணக்கார அனுபவங்களின் திரையில் தங்கள் அடையாளத்தை விட்டுச் சென்றன.

### பாரம்பரியத்தின் அடையாளம்

இலங்கையின் அண்மைக்கால பொருளாதாரச் சவால்களுக்கு முகங்கொடுத்து,

(09ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம் — classified advertisement




## வேலைவாய்ப்பு

தமிழ்த் தட்டச்சுத் தெரிந்த பக்க வடிவமைப்பாளருக்கான முழுநேரப் பகுதிநேர (இரவு) வேலைவாய்ப்பு உள்ளது. அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும். தொடர்புகளுக்கு - 0777277009

---

எழுதுமட்டுவாழ் பகுதியில் அமைந்துள்ள இயற்கை விவசாயப் பண்ணையில் தங்கி நின்று வேலைசெய்யக்கூடிய ஆண் தோட்டக்காரர் தேவை. உணவு, தங்குமிட வசதி செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு - 0766482303

---

நாவற்குழியில் உள்ள விருந்தினர் விடுதி (Hotel) ஒன்றில் அறை பராமரிப்பாளர், சுத்திகரிப்புத் தொழிலாளி, உணவு பரிமாறுபவர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. சம்பளத்திற்கு மேலதிகமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777276818

---

யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் அமையவுள்ள உள்ளூர் உற்பத்திப் பொருள் விற்பனை அங்காடியில் விற்பனை உதவியாளர் வேலைவாய்ப்பு உள்ளது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0767403814

---

நாட்டின் பல பாகங்களில் வியாபாரத்தினைக் கொண்டுள்ள நிறுவனத்தின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அலுவலகத்திற்குக் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேலைவாய்ப்பு உள்ளது. கணக்குவழக்குப் பராமரித்தல், வங்கி நடவடிக்கைகள் மேற்கொள்ளல் என்பன வேலைகளாக இருக்கும். அனுபவம் வாய்ந்த கணக்காளரின் கீழ் வேலைசெய்யும் வாய்ப்பு.

தொடர்புகளுக்கு 0777299386

---

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள **Software and Web Developement** நிறுவனத்திற்குச் சகல நிலைகளுக்குமான ஆள் சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனுபவம் உள்ளவர்கள் மற்றும் பயிற்சிபெற விரும்புபவர்கள் உங்களின் சுயவிபரக் கோவையினை **onlinew4u@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (மின்னஞ்சலின் **subject** இல் **Software and Web Developement** குறிப்பிட்டு அனுப்பவும்)

---

விளம்பரம் சேகரிப்பாளர் **(Advertisement Collector)** முழுநேர, பகுதிநேர வேலைவாய்ப்பு - அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படும். தொடர்புகளுக்கு 0777277009

---

வாகனச் சாரதிக்கான வேலைவாய்ப்பு. **light vehicle driving license - B, C, G1** சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு 0770684905

---

## SALE விற்பனைக்கு

தரமான சுவையான குறிஞ்சிக் கோப்பி விற்பனைக்கு உண்டு. மலையகத்தில் இருந்து பெறப்பட்ட தரமான கோப்பியில் இருந்து சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட யாழ்ப்பாணச் சுவையுடனான கோப்பிகள் 100g Tinகளில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு 0764438620

---

கறுவாக் கன்றுகள் விற்பனைக்கு உள்ளன. யாழ்ப்பாணத்துச் சீதோஸ்ணத்தில் வளரக்கூடிய கறுவாக் கன்றுகள். 2 கன்றுகள் அடங்கிய பை 150 ரூபாய் மட்டுமே.

தொடர்புகளுக்கு - 0766482303

---

வீட்டுத் தோட்ட விதைகள் விற்பனைக்கு உள்ளன - 0763352782 - கிளிநொச்சி

---

சுத்தமாகத் தயாரிக்கப்பட்ட நவதானியங்கள் அடங்கிய சத்துமா விற்பனைக்கு உண்டு. - 0760225528 மன்னார்.

---

புரோட்டின் நிறைந்த கச்சான் லட்டுக்களைப் பெற்றுக்கொள்வதற்கு - 0777 421896 கிளிநொச்சி.

---

அனைத்து வகையான வடகங்கள் மற்றும் மூலிகைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள - 0779151820 கிளிநொச்சி.

---

பாரம்பரிய முறையில் தயார் செய்யப்பட்ட சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் அழைக்க வேண்டிய இலக்கம். - 0766982219 யாழ்ப்பாணம்.

---

மூலிகைகளால் தயாரிக்கப்படும் சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு - 0773972309 மன்னார்.

---

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும் பத்திக் துணிகளையும் ஆடைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தொடர்புகொள்ளவும் - 0776126448

வாரஇதழ்...

தமிழர் பொருண்மியம் வாரமலர் TAMILS ECONOMY

| கறுப்பு வெள்ளை விளம்பரம் | |
|---|---|
| வரி விளம்பரம் | இலவசம் |
| பெட்டி விளம்பரம் | 600.00 |
| ¼ பக்கம் | 3,500.00 |
| ½ பக்கம் | 6,000.00 |
| முழுபக்கம் | 10,000.00 |

| வர்ண விளம்பரம் | |
|---|---|
| பெட்டி விளம்பரம் | 900.00 |
| ¼ பக்கம் | 5,000.00 |
| ½ பக்கம் | 9,000.00 |
| முழுபக்கம் | 16,000.00 |

தமிழர் பொருண்மியம் வாரஇதழில் உங்கள் விளம்பரங்களை வெளியிட

0777 27 69 49 | 076 443 8622

#68, குறோசெட் வீதி, யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம் classified advertisement




பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகளை மிகத் தரமானதாகவும் குறைந்த விலையிலும் பெற்றுக்கொள்ள அழையுங்கள். - 0772034807

---

கிளிநொச்சியில் நியாயமான கட்டணத்தில் வடி ரக வாகனத்தை வாடகைக்கு அமர்த்தலாம். - தொடர்புகளுக்கு - 0776199969

---

ஆரோக்கியமான சிறந்த சருமத்தையும் அழகையும் முகப்பொலிவையும் பெற்றுக்கொள்வதற்கு மூலிகை மூலம் தயாரிக்கப்பட்ட சவர்க்காரங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கலாம். எங்களது உற்பத்திகளுக்கு நாங்களே உத்தரவாதம். 0763352782

---

நீங்கள் ஒரு தொழிலைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருக்கிறீர்களா? எப்படி தொழிலை ஆரம்பிப்பது என்ற குழப்பம் உங்களுக்கு இருக்கிறதா? இன்றே எங்களை நாடுங்கள். உங்களது முதலீட்டிற்கு ஏற்ப சிறந்த வியாபாரத் திட்டத்தினை உருவாக்கித் தருவதோடு தொழில் தொடர்பான ஆலோசனைகளையும் உங்களுக்கு வழங்க முடியும். - 0753780530

---

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய தரத்திலான கருவாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு அழைக்கவும்.
0778412785

---

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த ஔடதங்களைப் பெற்றுக் கொள்ள எங்களை அழைக்கவும்
0766996628

---

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிக்சிகளுக்குரிய (கிரைண்டர்) பாட்ஸ்களும் (Parts), சைக்கிள் (Cycle) உதிரிப் பாகங்களும் (Parts) மொத்தமாக விற்பனைக்குள்ளன.
தொடர்புகளுக்கு - 077 6566508.

---

### காணி விற்பனைக்கு

**A9** வீதியில் இருந்து 1km தூரத்தில் எழுதுமட்டுவாழ் - நாகர்கோவில் வீதியில் 2 பரப்பு, 4 பரப்புக் காணிகள் விற்பனைக்கு. இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுக் காலத்தினை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்வதற்கு ஏற்ற இடம். தொடர்புகளுக்கு 0779789177

---

மூலிகைத் தோட்டம் ஒன்றை மேற்பார்வை செய்வதற்கு ஓரளவு மூலிகைகளைப் பற்றிய அறிவும் தேக ஆரோக்கியமும் உள்ள ஒருவர் தேவை -
0772034807

---

### தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபலமான பத்திரிகை நிறுவனத்திற்குச் சந்தைப்படுத்தல் முகாமையாளர் தேவை - 0773078799

---

திருநெல்வேலியில் உள்ள அப்பக்கடை ஒன்றிற்கு அப்பம் சுடுவதற்கு ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். 077 118 1590

---

பண்ணை வேலைக்கு ஆள் தேவை. சம்பளமாகச் சுமார் 55,000/= வீடு கொண்டு செல்லக்கூடியதாகவும் EPF&ETF முழுவதும் எம்மால் கட்டப்படுவதுடன் உணவும் எம்மால் வழங்கப்படும். (தங்கி நின்று வேலைசெய்வதுடன் மாத விடுமுறையில் வீடு சென்று வரலாம்) தொடர்புக்கு 0773024473

---

இயந்திர மூலம் குழாய்க் கிணறு அமைத்துத் தரப்படும்.
0775652282

---

கிளிநொச்சி - அக்கராயனில் சோளன் பொத்திகளைச் சந்தைப்படுத்த முடியாமல் விவசாயி, கிருஸ்ணபிள்ளை கரன் என்பவர் அவதிப்படுகிறார். இன்னும் ஐயாயிரம் (5000) பொத்திகள் அவரிடம் உண்டு. தேவைப்படுபவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்.
Krishnapillai Karan - 0773853765

---

### கல்வி

இம்முறை க.பொ.த(சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான தமிழ் மொழிப் பாடத் துரித மீட்டல் புலனக்குழுவில்(WhatsApp group) இணைய அனுமதிக்கட்டணம் 500/= மட்டுமே! [இலவச வகுப்புகள்- வரையறையற்ற கற்றல்- வித்தியாசமான கற்றல்- நவீன கற்றல்- எதிர்பார்க்கும் பெறுபேறு உறுதி.
தொடர்புகளுக்கு: - அ.வே.கோகிலன் - 94717326587

---

சிறந்த இசையமைப்பாளரால் ஓகன் வாத்தியம் கற்பிக்கப்படுகிறது. - 0772469113

---

வன்னி கல்லூரி கிளிநொச்சியில் இலகுவழியில் ஜெர்மன் மொழி A1 பரீட்சைக்கான இலகுவான முறையில் தயார்படுத்தல் இடம்பெறுகின்றது. தொடர்புகளுக்கு - 0769395457

---

கிளிநொச்சியில் ஆரிக்கலையினைக் கற்றுக் கொள்வதோடு உங்களுக்குத் தேவையான (design) ஆடைகளுக்கு ஆரிவேலைகளும் செய்து கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு - 0769395457

---

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி ஆகிய பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலுமை, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்




தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/- (USD 550)
பரப்பு 20 இலட்சம் (USD 5,500)

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

நுவரெலியா பிரதான தபால்நிலையத்தை விற்பனை செய்வது குறித்து அரசாங்கம் சிந்தித்துள்ளது. இது விவாதத்தையும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. சிலர் வருவாயைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கையாகக் கருதுகின்றனர், மற்ற வர்கள் தபால் அலுவலகத்தின் வரலாற்று மற்றும் கலாச்சார முக்கியத்துவம் எந்த வொரு சாத்தியமான நிதி ஆதாயத்தை யும் விட அதிகமாக உள்ளது என்று வாதிடு கின்றனர்.

இந்த நிச்சயமற்ற நிலைகள் இருந்த போதிலும், நுவரெலியா பிரதான அஞ்சல் அலுவலகம் நகரின் மீள்தன்மை மற்றும் பாரம்பரியத்தின் அடையாளமாக உள்ளது, கடந்த காலத்திற்கான உறுதியான இணைப் பாகும். இது அதை எதிர்கொள்பவர்களைத் தொடர்ந்து ஊக்குவித்து வசீகரிக்கும். அதன் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருக்க லாம், ஆனால் நுவரெலியாவின் அடையா ளத்தின் அடித்தளமாக அதன் மரபு மறுக்க முடியாதது.

### நியாயப்படுத்தும் அரசு

நுவரெலியா பிரதான தபால்நிலையத்தை விற்பனை செய்வது தொடர்பில் அரசாங்கம் பல காரணங்களை முன்வைத்துள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வருவாயை உருவாக்க வேண்டும் என்பது ஒரு முதன்மை வாதம். இலங்கை தற்போது கடுமையான கடன் சுமை, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் அந்நியச் செலாவணி கையிருப்பு பற்றாக்குறை ஆகியவற்றுடன் போராடி வருகிறது. இந்த நிதி அழுத்தங்களைத் தணிக்க, தபால் அலுவலகத்தை விற்பதன் மூலம் மிகவும் தேவையான நிதியை



வழங்க முடியும் என்று அரசாங்கம் நம்பு கிறது.

நுவரெலியா பிரதான தபால் நிலையத்



தைப் பாதுகாப்பதற்கான ஆதரவாளர்கள், அதன் வரலாற்று மற்றும் கட்டடக்கலை முக்கியத்துவம் அதன் விற்பனையின் சாத்தியமான நிதி ஆதாயத்தை விட அதிக மாக இருப்பதாக வாதிடுகின்றனர். டியூடர் பாணி கட்டிடக்கலை மற்றும் மணிக்கூண்டு கோபுரத்துடன் கூடிய தபால் அலுவலகம், நுவரெலியா நகரத்தில் ஒரு முக்கிய அடை யாளமாகவும், இலங்கையின் காலனித் துவ கடந்த காலத்தின் அடையாளமாகவும் உள்ளது.

அதை விற்பது நாட்டின் வரலாற்றின் ஒரு பகுதியை அழிப்பது மட்டுமல்லாமல்,




மதிப்புமிக்க கலாச்சாரச் சொத்தை பொதுமக் களின் அணுகலையும் இழக்கச் செய்யும் என்ற அவர்களுடைய கருத்தும் புறக்கணித்து விடக்கூடியதல்ல.

### வருவாய்க்கான மாற்றுத் தீர்வுகள்

விற்பனையை எதிர்ப்பவர்கள், அரசாங் கம் அதன் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் சமரசம் செய்யாமல் வருவாயை ஈட்ட மாற்றுத் தீர்வுகளை ஆராயலாம் என்று கூறுகின்றனர். தபால் அலுவலகத்தின் வணிகச் செயல்பாடுகளை மேம்படுத்து தல், அதன் நிர்வாகத்திற்கான பொது-தனி யார் கூட்டாண்மைகளை ஆராய்தல் அல் லது கலாச்சாரப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக் கப்பட்ட சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுதல் போன்ற நடவடிக்கை களை அவை முன்மொழிகின்றன.

நுவரெலியாப் பிரதான தபால் நிலை யத்தை விற்கலாமா வேண்டாமா? என்ற முடிவானது நிதி மற்றும் கலாச்சாரம் ஆகிய இரண்டையும் கவனமாக பரிசீலிக்க வேண் டிய சிக்கலான ஒன்றாகும். அரசாங்கம் அதன் பாரம்பரியத்தை நீண்டகாலமாகப் பாதுகாத்தல் மற்றும் வரலாற்றுச் சின்னங் களை அணுகுவதற்கான பொதுமக்களின் உரிமைக்கு எதிராக உடனடி வருவாய் தேவையை எடைபோட வேண்டும்.

ஒரு சமநிலையான அணுகுமுறையா னது, தபால் அலுவலகத்தின் வரலாற்று மற்றும் கட்டடக்கலை ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதை உறுதி செய்யும் அதே வேளையில், வருவாய் ஈட்டும் மாற்று விருப்பங்களை ஆராய்வது அடங்கும். சில பகுதிகள் அல்லது சேவைகளுக்கு பொது அணுகலை அனுமதிக்கும் அதே வேளையில், கட்டிடத்தை ஒரு தனியார் நிறுவனத்திற்கு அரசாங்கம் குத்தகைக்கு விடலாம்.

நுவரெலியா பிரதான தபால் நிலையத் தின் உத்தேச விற்பனையானது இலங்கை யின் பாரம்பரியத்தின் பெறுமதி மற்றும் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக் கும் அரசாங்கத்தின் முன்னுரிமைகள் பற்றிய விவாதத்தை தூண்டியுள்ளது. வரு வாயின் தேவை புரிந்து கொள்ளக்கூடிய தாக இருந்தாலும், நாட்டின் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கும், அவற்றை அணுகும் பொதுமக்களின் உரிமைக்கும் அது பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது.

நுவரெலியா பிரதான தபால் நிலையத் தின் பாரம்பரியம் எதிர்கால சந்ததியின ருக்கு அப்படியே இருப்பதை உறுதிசெய்து, கலாச்சார பாதுகாப்போடு நிதித் தேவைகளை சமநிலைப்படுத்தும் தீர்வை அரசாங்கம் காண வேண்டும். இதற்கான கலந்துரை யாடல்களை சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடன் நடத்துவதற்கு முன்வர வேண்டும். தன்னிச் சையான முடிவுகள் நெருக்கடியை அதிக ரிப்பதற்கே உதவும்.




# பெறுமதி சேர் வரியை அதிகரிக்கும் திட்டம்



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர்,
வரி முகாமைத்துவ ஆலோசகர்

இலங்கையில் பெறுமதி சேர் வரி (VAT) என்பது நுகர்வு வரியாகும். இது நாட்டிற்குள் பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகம் & பொருட்களை இறக்குமதி செய்வதன் மீது விதிக்கப்படுகிறது. இலங்கையில் தற்போதைய நிலையான VAT விகிதம் 15% ஆகும். இது அக்டோபர் 2022 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இருப்பினும், VAT இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்ட / பூஜ்ஜிய VAT விகிதத்திற்கு உட்பட்ட பல பொருட்கள் மற்றும் சேவைகளும் உள்ளன.

## VAT பதிவு

ஆண்டுக்கு LKR 80 மில்லியனுக்கும் அதிகமான (காலாண்டிற்கு LKR 20 மில்லியன்) வரி விதிக்கக்கூடிய பொருட்கள் அல்லது சேவைகளை வழங்கும் எந்தவொரு நபரும் VATக்கு பதிவு செய்ய வேண்டும். இருப்பினும், VAT பதிவுத் தேவையைத் தூண்டக்கூடிய பல காரணிகளும் உள்ளன. அவை பின்வருமாறு

• இலங்கைக்குள் பொருட்களை இறக்குமதி செய்தல்

• மற்றொரு VAT-பதிவு செய்யப்பட்ட நபருக்கு வரி விதிக்கக்கூடிய பொருட்களை வழங்குதல்.

• நிதிச் சேவைகள் அல்லது தொலைத் தொடர்புச் சேவைகள் போன்ற குறிப்பிட்ட சேவைகளை வழங்குதல்.

VAT படிவம் மற்றும் கொடுப்பனவுகள்

VAT-பதிவுசெய்யப்பட்ட நபர்கள் VAT படிவத்தைத் தாக்கல் செய்ய வேண்டும், மற்றும் உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்திற்கு (IRD) VAT செலுத்துதல்களை மாதந்தோறும் அல்லது காலாண்டு அடிப்படையில் செய்ய வேண்டும்.

## உள்ளீடு VAT மற்றும் வெளியீடு VAT

VAT-பதிவு செய்யப்பட்ட நபர் மற்றொரு VAT-பதிவு செய்யப்பட்ட நபரிடம் இருந்து பொருட்கள் அல்லது சேவைகளை வாங்கும் போது, வாங்கும் விலையில் VAT விதிக்கப்படும். இது உள்ளீடு VAT (Input VAT) எனப்படும். VAT-பதிவு செய்யப்பட்ட நபர் பொருட்கள் அல்லது சேவைகளை விற்கும்போது அவர்கள் தங்கள் வாடிக்கையாளர்களிடம் VAT வசூலிக்கிறார்கள். இது வெளியீட்டு (Output VAT) எனப்படும்.

VAT-பதிவு செய்யப்பட்ட நபர்கள் தங்கள் பதிவை தாக்கல் செய்யும் போது அவர்களின் வெளியீட்டு VATக்கு எதிராக உள்ளீடு VAT ஐ ஈடுகட்ட முடியும். இதன் பொருள் அவர்கள் IRD க்கு செலுத்த வேண்டிய நிகர VAT ஐ மட்டுமே செலுத்த வேண்டும்.

செலுத்தவேண்டிய VAT = (உள்ளீடு VAT - ntspaPL VAT)

VAT Payable = (Input VAT – Output VAT)

VAT விலக்குகள் மற்றும் பூஜ்ஜிய-மதிப்பிடப்பட்ட விநியோகங்கள் (VAT Exemptions and Zero-rated supplies)

பல பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு VAT இல் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன / பூஜ்ஜிய VAT விகிதத்திற்கு உட்பட்டுள்ளன. பின்வருவன இதில் அடங்கும்.

• பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி

• உணவு மற்றும் மருந்து போன்ற சில அத்தியாவசிய பொருட்கள்மற்றும்சேவைகள்

• கல்விச் சேவைகள்

• சுகாதாரச் சேவைகள்

• நிதிச் சேவைகள்

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பெறுமதி சேர் வரியில் (VAT) பல சிக்கல்கள் உள்ளன. இவற்றில் பின்வரு

வன அடங்கும்.

• குறைந்த VAT செலுத்துனர்கள்: இலங்கையில் சிறிய அளவிலான வணிகங்கள் மட்டுமே VAT க்கு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் அதிக VAT பதிவு வரம்பு, VAT அமைப்பின் சிக்கலான தன்மை மற்றும் வணிகங்களிடையே VAT தேவைகள்பற்றிய விழிப்புணர்வு இல்லாமை உள்ளிட்ட பல காரணிகளால் இது ஏற்படுகிறது. இதன் விளைவாக சாத்தியமான VAT வருவாயில் கணிசமான அளவு அரசாங்கம் இழக்கிறது.

• உயர் இணக்கச் செலவுகள்: இலங்கையில் VAT அமைப்பு சிக்கலானது மற்றும் வணிகங்களுக்கு இணங்குவதற்கு சுமையாக உள்ளது. இது குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) பொருந்தும். அதிக இணக்கச் செலவுகள் வணிகங்களை VATக்கு பதிவு செய்வ தைத் தடுக்கலாம் மற்றும் VAT அறிக்கை யிடலில் பிழைகள் ஏற்படலாம்.

• அதிக ஏய்ப்பு விகிதங்கள்: இலங்கையில் VAT ஏய்ப்பு விகிதம் சுமார் 30% என மதிப்பிடப்பட்டுள்ளது. VAT-பதிவுசெய்யப்பட்ட வணிகங்களைத் தணிக்கை செய்ய உள்நாட்டு வருவாய்த் திணைக்களத்தில் (IRD) ஆதாரங்கள் இல்லாதது மற்றும் வணிகங்கள் VAT-I எளிதாகத் தவிர்ப்பது உள்ளிட்ட பல காரணிகளால் இது ஏற்படுகின்றது.

• எண்ணற்ற விதிவிலக்குகள் மற்றும் பூஜ்ஜியத் தரப்படுத்தப்பட்ட விநியோகங்கள்: இலங்கை VAT முறையானது பரந்த அளவிலான விலக்குகள் மற்றும் பூஜ்ஜிய-தரப்படுத்தப்பட்ட விநியோகங்களைக்கொண்டுள்ளது. இது VAT முறைமையினை சிக்கலாக்குகின்றது மற்றும் நிர்வகிப்பதைக் கடினமாக்குகின்றது. மேலும் இது அரசாங்கம் சேகரிக்கும் VAT வருவாயின் அளவையும் குறைக்கின்றது.

இந்தப் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக இலங்கையின் VAT முறையானது அதன் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறல் இல்லாமை காரணமாகவும் விமர்சிக்கப்படுகின்றது. VAT வருவாய் வசூல் அல்லது VAT ஏய்ப்பு பற்றிய வழக்கமான தரவை IRD வெளியிடுவதில்லை. இது VAT அமைப்பின் செயற்றிறனை மதிப்பிடுவதையும் மேம்படுத்துவதற்கான பகுதிகளைக் கண்டறிவதையும் கடினமாக்குகின்றது.

VAT முறையினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக, சமீபத்திய ஆண்டுகளில் VAT பதிவு வரம்பு குறைக்கப்பட்டுள்ளது. மேலும் VAT இணக்கத்தை மேம்படுத்த IRD பல நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளது. எவ்வாறாயினும், VAT அமைப்பில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கும், அதை மிகவும் திறமையாகவும், பயனுள்ளதாகவும் மாற்றுவதற்கும் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும்.




இலங்கை VAT முறையை சீர்திருத்த சில குறிப்பிட்ட பரிந்துரைகள்:

• VAT பதிவு வரம்பைக் குறைத்தல்: இது அதிக வணிகங்களை VAT வலைக்குள் கொண்டு வந்து VAT வருவாய்ச் சேகரிப்பை அதிகரிக்கும்.

• VAT முறையை எளிமையாக்குதல்: வணிகங்கள் VAT முறைக்கு இணங்குவதை எளிதாக்கும்மற்றும்இணக்கச்செலவுகளைக் குறைக்கும்.

• IRD இன் வளங்களை அதிகரித்தல்: இது IRDஐ அதிக VAT-பதிவு செய்யப்பட்ட வணிகங்களை தணிக்கை செய்ய அனுமதிக்கும் மற்றும் VAT ஏய்ப்பு விகிதத்தை குறைக்கும்.

• விலக்குகள் மற்றும் பூஜ்ஜிய மதிப்பீடு செய்யப்பட்ட விநியோகங்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்: இது VAT முறையை எளிமையாகவும் திறமையாகவும் மாற்றுவதோடு VAT வருவாய் சேகரிப்பையும் அதிகரிக்கும்.

• VAT அமைப்பின் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புணர்வை அதிகரித்தல்: VAT வருவாய் வசூல் மற்றும் VAT ஏய்ப்பு பற்றிய வழக்கமான தரவுகளை IRD வெளியிட வேண்டும். இது VAT அமைப்பின் செயற்றிறனை மதிப்பிடுவதற்கும் முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதற்கும் உதவும்.

## இலங்கையில் VAT விகித மாற்றங்களின் வரலாறு

2002இல் VAT ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இலங்கை வரி செலுத்துவோர் அனுபவித்த அதிகூடிய VAT வீதம் 20% ஆகும். ஆகஸ்ட் 2002 முதல் 2003 இறுதி வரை நிலையான விகிதமாக 20% காணப்பட்டது. அதன் பிறகு ஆகஸ்ட் 2005 முதல் நவம்பர் 2010 வரை சொகுசு விகிதமாக இருந்தது.

1) 1.8.2002 முதல் 31.12.2003 வரையிலான காலகட்டத்தில் 10% மற்றும் 20% VAT விகிதங்கள் பொருந்தும்.

2) 2.8.2005 முதல் 31.12.2008 காலப் பகுதியில் மூன்று VAT விகிதங்கள் பயன்படுத்தப்பட்டன. (20%, 15% மற்றும் 5%)

3) 1.1.2009 முதல் 22.11.2010 வரை 20% மற்றும் 12% பயன்படுத்தப்பட்டன.

4) 20% என்ற சொகுசுக் கட்டணம் ரத்து செய்யப்பட்டது. 23.11.2010

எனவே, 20% என்பது இலங்கை வரி செலுத்துவோர் அனுபவித்த அதிகூடிய VAT வீதமாகும்.

VAT விகிதம் 15%லிருந்து 18% வரை உயர்வு

VAT விகிதத்தை 2024 ஜனவரி 1 முதல் 15% இலிருந்து 18% வரை உயர்த்துவதற்கு அமைச்சரவையில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. VATஐ அதிகரிக்க சமீபத்திய மற்றும் கடந்த அரசாங்கங்கள் பல முயற்சிகளை மேற்கொண்டன. அரசின் வருவாய் IMFன் வருவாய் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யவில்லை. எனவே, அரசாங்கத்தின் வருவாயில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பே முன்மொழியப்பட்ட அதிகரிப்புக்குக் கூறப்படும் காரணமாகும். கட்டண உயர்வு நிச்சயமாக அதிக வசூலுக்கு வழிவகுக்கும். இது பட்ஜெட் பற்றாக்குறையையும் குறைக்கும். எவ்வாறாயினும், VAT விகிதத்தை அதிகரிப்பதைத் தவிர கூடுதல் வருவாயை உருவாக்கும் பிற வழிகளைப் பயன்படுத்தியிருந்தால் இந்த அதிகரிப்பின் எதிர்மறையான தாக்கதினை உதாரணமாக பணவீக்கம் அதிகரித்தலைத் தடுக்கலாம்.

வாடிக்கையாளர்களுக்கு நேரடியாக தங்கள் பொருட்களையும் சேவைகளையும் விற்கும் வணிகங்கள், குறிப்பாக வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைத் துறை போட்டித்தன்மையைத் தக்கவைக்க அழுத்தத்தை அனுபவிக்கும். மற்றும் பொருட்கள் அல்லது சேவைகளின் விலை பாதிக்கப்படாமலிருக்க ஒரு பகுதி அல்லது அனைத்து VAT உயர்வையும் சுமக்க வேண்டும். பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு VAT விலக்கு அளிக்கப்பட்ட வணிகங்கள் உள்ளீட்டைக் கோர முடியாததால் செலவில் அதிகரிப்பு ஏற்படும்.

VAT உரிமை கோர முடியாத மதிப்புச் சங்கிலியில் செயற்படும் வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகங்கள் மீது ஓர் அடுக்கு விளைவு உள்ளது. அரசாங்க செலவினங்களுக்கு நிதியளிக்க அரசாங்கத்திற்கு அதிக பணம் தேவைப்படும். எவ்வாறாயினும், வருவாய் உருவாக்கம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதையும் செலவினங்களை நிர்வகிப்பதற்கான கூடுதல் வழிகளையும் அரசாங்கம் மிகவும் விமர்சன ரீதியாகப் பார்க்க வேண்டும்.

மேலும், VAT அமைப்பில் தீவிரமான மாற்றங்கள் மற்றும் அது தற்போது எவ்வாறு செயற்படுகின்றது என்பதை கருத்திற்கொள்ள வேண்டும். இதனால் அது ஒரு சிறந்த வரி முறையாக மாறும். இந்த மாற்றங்களில் VAT பதிவு வரம்பு அடங்கும். VAT விகிதத்தின் அதிகரிப்பின் விளைவாக நுகர்வோர் அனுபவிக்கும் செலவு அதிகரிப்பிலிருந்து சமூகத்தின் ஏழை உறுப்பினர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

+94-777-802-900
Email: swaminathan@agsarma.com

# தையல் ஊசியையும் நூலையும் கொண்டு சிகரம் தொட்ட பெண்

நேர்கண்டவர் - பி.பவித்ரா

சரஸ்வதி ஜீவராஜ், நூலையும் தையல் ஊசியையும் கொண்டு தன்னுடைய வாழ்க்கையை மட்டுமன்றி பெண்கள் பலருடைய வாழ்க்கையையும் மாற்றியவர். போர்க் காலத்தில் பல இழப்புக்கள், இடப்பெயர்வுகள் என்பவற்றால் எல்லோரையும் போலவே துன்பத்தின் இறுதி எல்லைவரை சென்றவர் சரஸ்வதி. ஆனால், துணிச்சல், தன்னம்பிக்கை என்பவற்றின் துணையால் தன்னுடைய வாழ்கையையே மாற்றியவர். பலருக்கு வாழ்வாதாரத்தை ஏற்படுத்திக் கொடுத்தவர். இப்போதும் கொடுத்துக் கொண்டிருப்பவர்.

இதன் உச்சமாக "சிகரம் தொட்ட தமிழ்ப் பெண்கள்" என்ற விருதையும் பெற்று வெற்றி நடைபோடுகின்றார் சரஸ்வதி. வன்னியில் இன்று முன்னணி ஆரிக்கலை நிபுணராகவும், ஆரிக்கலை பயிற்றுனராகவும், வடிவமைப்பாளராகவும், சுயதொழில் முயற்சியாளராகவும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களோடு இனணந்து செயற்பட்டு வருகின்றார் சரஸ்வதி ஜீவராஜ். "தமிழர் பொருண்மியம்" சார்பில் அவரைச் சந்தித்த போது தன்னுடைய வெற்றிக் கதையை அவர் சுருக்கமாகச் சொன்னார்.

சரஸ்வதி ஜீவராஜ் கிளிநொச்சியை பிறப்பிடமாகக் கொண்டவர். தாய், தந்தையர் நெடுந்தீவை சேர்ந்தவர்கள். கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றவர். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தில் community mobilizer ஆக பணிபுரிந்தவர். தொடர்ந்தும் பல அரச்சார்பற்ற நிறுவனங்களில் பல பதவிகளில் சமூகத்துடன் இணைந்து பணியாற்றியவர். இதன்மூலமாக தான் பெற்றுக்கொண்ட அனுபவங்கள், அறிமுகங்கள் தன்னை ஒரு சுய தொழில் முயற்சியாளராக வளர்த்தது என்று கூறுகின்றார் சரஸ்வதி. இனி அவரது நேர்காணலுக்குள் செல்வோம்.

**கேள்வி -** போரினால் பெரும் நெருக்கடிகளையும் இழப்புக்களையும் சந்தித்த நீங்கள், உங்களுடைய வாழ்வாதாரத்துக்கு தையற்கலையைத் தேர்தெடுக்க காரணம் என்ன?

**பதில் -** மேலதிக வருமானத்திற்காக கைப்பை வடிவமைப்பை செய்யவேண்டும் என்ற எனது முயற்சிக்கு கிளிநொச்சியில்



சரஸ்வதி ஜீவராஜ்

பல கடைகளில் எனக்கு ஆதரவு கிடைத்தது. தையல் கலையில் இருந்த ஆர்வம் காலத்தின் தேவைக்கேற்ப ஆரிக்கலையை கற்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இந்திய ஆரிக்கலை பாடத்தை இலங்கையிலும் இந்தியாவிலும் முறையாகக் கற்று கொண்டேன்.

அதனை தொடர்ந்து 2019ஆம் ஆண்டு எனது சகோதரன் நடாத்திவந்த "College of vanni" நிறுவனத்தினைப் பொறுப்பேற்று பல சுயதொழில் முயற்சியாளர்கள் பெண் தலைமைத்துவம் தாங்கும் குடும்பத்தினர் வெளிநாட்டு தொழில் முயற்சிக்காக செல்லும் பெண்கள் ஆண்கள் எனப் பலருக்கும் பயிற்சியளித்தேன்.

மன்னார் நெடுந்தீவு அம்பாள்குளம். பரந்தன், கண்டாவளை கிளிநகர் ஆனந்தபுரம், ஸ்கந்தபுரம் எனப்பல இடங்களில் பல தொழில் முயற்சியாளர்ளை தனிப்பட்ட மற்றும் தனியார் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து எனது வெற்றிப்பயனம் தொடர்கிறது. அத்தோடு 2014 ம் ஆண்டில் இருந்து ஜெர்மன் நாட்டிற்கு செல்வோருக்கான deutsch A1 கல்வியினை எனது கல்வி நிலையத்தின் ஊடாகக் கற்பித்து வருகின்றேன்.

**கேள்வி -** இதனை நீங்கள் மேலும் பலருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய துறையாக எவ்வாறு வளர்த்தெடுத்தீர்கள்?

**பதில் -** நான் கூகுள் வரைபடத்தில் என்னுடைய கொலிஜ் ஒப் வன்னியை பதிவு செய்திருக்கின்றேன். அதனைவிட ஆரிக்கலை - கிளிநொச்சி என்று கூகுளில் கொடுத்தாலும் எமது நிறுவனத்தைத்தான் காட்டும். அதன் மூலமாக கண்டறிந்துதான் ஜேர்மனி, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து விடுமுறைக்காக ஊருக்கு வரும் சிலர் எமது நிறுவனத்துக்கு வந்து படித்தார்கள்.

எம்மிடம் படிப்பவர்கள் அதனை முடிக்கும் போது பிளவுஸ் ஒன்றைச் செய்து காட்டவேண்டிய தேவை இருக்கின்றது. அதேவேளையில், அவர்களுக்கான ஓடர்களையும் நானே எடுத்துக்கொடுக்கிறேன். இதன் மூலமாக அவர்களுக்குத் தொடர்ச்சியாக ஓடர்கள் வந்துகொண்டிருக்கும். அதே வேளையில் நான்கு - ஐந்து மாணவர்கள் என்னிடம் தொடர்ச்சியாக வேலை செய்து கொண்டிருப்பார்கள். அது மாறிமாறி சுழற்சி அடிப்படையில் இருக்கும். தொடர்ச்சியாக ஒரே ஆட்கள் வேலை செய்ய மாட்டார்கள்.

என்னிடம் பயிற்சிக்கு வருபவர்களுக்கு அதனை சிறப்பாக செய்துமுடிப்பதற்கான வழிகாட்டல்களைக் கொடுத்து, அவர்களுக்கு அதில் ஆர்வத்தை ஏற்படுத்தி வழிப்படுத்துவதால் அவர்கள் தொடர்ச்சியாக அதனை தமது தொழிலாக செய்யக்கூடியதாக இருக்கின்றது.

**கேள்வி -** உங்களுடைய நிறுவனத்தில் எவ்வறான பயிற்சிகளை நடத்திக்கொண்டிருக்கின்றீர்கள்? இதில் எவ்வளவு பேர் பயின்றுள்ளார்கள்?

**பதில் -** எனது கல்வி நிறுவனத்தைப் பொறுத்தவரையில் குறங்காலப் பயிற்சி நெறி, சான்றிதழ் கற்கை நெறி, தொழில் சார்பயிற்சி நெறி என காலத்தின் தேவைக் கேற்ப பலவிதமான பயிற்சி நெறிகளை நடத்திவருகின்றேன். குறுங்கால பயிற்சி நெறியாக மெழுகுவர்த்தி செய்தல், கைப்பை வடிவமைப்பு, பொம்மை உற்பத்தி, கேக் அலங்காரம் என்பவற்றைச் செய்கின்றேன்.

சான்றிதழ் கற்கை நெறியாக ஆரிக் கலையைப் பயிற்றுவிக்கிறேன். முந் நூறுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தனிப் பட்ட மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்க




ளின் உதவியுடன் இதனைக் கற்று வெளியேறியுள்ளார்கள்.

இதனைவிட, ஜேர்மன் தூதரகத்தினால் ஜேர்மன் பயணிப்பவர்களுக்காக நடத்தப்படும் ஏ-1 பரீட்சைக்கு இலகுவழித் தயார்படுத்தலை முன்னெடுக்கின்றேன். ஆரம்ப அறிவுடன் பரீட்சைக்குச் செல்லும் வரையிலான தயார்படுத்தல் வகுப்புக்கள் மிக நேர்த்தியாக நடத்தப்படுகின்றன. இதுவரை 34 க்குக்கும் அதிகமான மாணவர்கள் இங்கு கல்விகற்று ஜேர்மனிக்கு சென்றுள்ளார்கள்.

**கேள்வி -** உங்களுடைய தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்கள் எந்தளவுக்கு உதவியிருக்கின்றன? அவை எந்தளவுக்கு உங்களுக்குப் பயனளித்துள்ளன?

**பதில் -** அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களைப் பொறுத்தவரையில் பயிற்சி நெறிக்கான வளவாளராக என்னைத் தெரிவு செய்து, என்னை பல மாவட்டங்களுக்கு அறிமுகப்படுத்தி என்னுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளார்கள். எனது ஆரம்பகால வளச்சியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்னை தெரிவு செய்து, புதிய தையல் இயந்திரம் ஒன்றை வாங்குவதற்கு உதவி செய்தது. அத்துடன் நின்றுவிடாது, அது தமது இணையத் தளத்தில் 'ICRC Needel Sri Lanka' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றையும் வெளியிட்டது. அதன்மூலமாக பல



ஓடர்கள் என்னைத் தேடிவந்தன. அவை எனது வளர்ச்சிக்கு துணையாக அமைந்தன.

**கேள்வி -** எவ்வாறான பொருட்களை நீங்கள் அதிகளவுக்கு உற்பத்தி செய்கின்றீர்கள்? அவற்றுக்கு எந்தளவுக்கு வரவேற்பு இருக்கின்றது?

**பதில் -** சாறி சட்டை வடிவமைப்பு, சட்டை வடிவமைப்பு என்பவற்றுடன் கற்பித்தலையும் மேற்கொள்கின்றேன். எனது மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எனக்குத் தனித்துவமான ஒரு இடமிருப்பதாகவே கருதுகின்றேன். வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் வருபவர்களும் என்னிடம் ஆரிக் கலையைப் பயில்கின்றார்கள். ஒன்லைன் மூலமாகவும் இதற்கான பயிற்சிகளை வழங்கிவருகின்றேன். ஒப்பீட்டடிப்படையில் என்னிடம் ஆரிக் கலையினைக் கற்பதற்காகவே அதிகமானவர்கள் வருகின்றார்கள். என்னிடம் கற்கும் மாணவர்களே புதிய மாணவர்களை அதிகளவுக்கு அறிமுகம் செய்கின்றார்கள்.

**கேள்வி -** புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் உங்களுடைய உற்பத்திப் பொருட்களை எந்தளவுக்கு விரும்பிக்கொள்வனவு செய்கின்றார்கள்?

**பதில் -** ஆரிக்கலை வகுப்புக்களை புலம்பெயர்ந்த மக்கள் ஒன்லைன் மூலமாகவும் படிக்கின்றார்கள். அத்துடன் அவர்கள் தாயகத்துக்கு வருகை தரும் போது நேரடியாக வந்தும் படித்திருக்கின்றார்கள். அதனைவிட, எமது நிறுவனத்தின் சேவைகள் குறித்து அறிந்திருக்கும் புலம்பெயர்ந்த எம்மவர்கள் பலர் அங்கிருந்தே ஓடர்களையும் தருகின்றார்கள்.


**கேள்வி -** “சிகரம் தொட்ட தமிழ்ப் பெண்



கள்” என்ற விருது அண்மையில் உங்களுக்கு கிடைத்தது. எதற்காக இந்த விருது உங்களுக்கு கிடைத்தது? யார் வழங்கியிருந்தார்கள்?

**பதில் -** சிகரம் தொட்ட தமிழ்ப் பெண்கள் என்ற விருது இலங்கை அழகுக் கலை சம்மேளனத்தினால் வழங்கப்பட்டது. சொந்தமாக ஒரு தொழில் முயற்சியைத் தொடங்கி அதில் வெற்றி பெற்றிருப்பதற்காகவே இந்த விருதுக்கு நான் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். அதாவது ஒரு சுய முயற்சிக்கான விருதாகத்தான் இது எனக்கு வழங்கப்பட்டது.

# இயற்கையும் செயற்கையும்



## எங்கள் வாழ்வும் வளமும்



- தமிழ்க்கவி -

"மழைகாலம் வழி வழுக்கும் மிகக் கவனம் மக்காள்

வழியருகே வெள்ளமுண்டு விலகி வர வேண்டும்.

வெள்ளத்தில் கல்லெறிந்து விளையாட வேண்டாம்.

வீண்சண்டையால் வழுக்கி விழுந் தெழும்ப நேரும்."

இது நாங்கள் அரிவரி படிக்கும் போது பாடசாலையில் கற்ற பாடல் அந்தக்காலத் தில் எமது பாடசாலைக்கு நாங்கள் நடந்தே சென்ற காலம் அது அந்த சின்ன வயதில் நாங்கள் வெள்ளத்தில் இறங்கி விளை யாடிக்கொண்டேதான் பாடசாலை விட்டு வீடு வருவோம். கால்களில் நீர்ச்சிரங்கு எல்லோருக்கும் வரும். காரணம் யாருக் கும் கால்களில் செருப்பும் இருக்காது. அழுக்குகளை அதாவது விலங்குகளுடன் மனிதக் கழிவுகளும் தெருக்களில் வந்தி ருக்கும். பெரும் செல்வந்தர் வீடுகளில் மாத்திரம் மலசலகூடம் இருக்கும். சாதாரண மக்களுக்கு காடுகளும் பற்றைகளும்தான்.

இன்றைய உலகம் எமது பாதுகாப்பை உறுதி செய்வதை விட, இதற்கான உபகர ணங்களை விற்பதில் பெரும் இலாபமீட்டி வருகின்றன. நாம் வீட்டுக்குள்ளேயே குளிக்கவும் மலசலங் கழிக்கவும் தொடங்கி வெகுகாலமாகிவிட்டது. எனவே அதற்கான சுகாதார பழக்க வழக்ககங்களையும் மாற்றி வருகிறோம். பாருங்கள் எந்த வீடா னாலும் அநேகமாக மலசலகூடம் சமை யலறையை அண்டியதாகவே அமைகி றது. அது வாஸ்து முறையாம்.

வீட்டைக்கட்டிப்பார் கல்யாணத்தைப் பண்ணிப்பார் என்பார்கள். காரணம் இரண்டுமே தொட்டுத் தொட்டு செலவுகளை இழுத்துக் கொண்டே போகும். சாதாரண மாக வெளியே மலசலகூடம் இருந்தபோது நாம் நெருப்புத் தண்ணி என எமது மக்க ளால் அழைக்கப்படும் அசிட் ஊற்றி சுத்தம் செய்தோம். போர்க்காலத்தில் வெறும் மண்ணெய்யே இந்தப்பணியை செய்தது. இன்று இரண்டுமில்லை

மலசலகூட சுத்திகரிப்பு பொருட்கள் தூளாகவும் கரைசலாகவும் திரவமாகவும் அழகிய போத்தல்களில் வருகின்றன. அதற் கான விளம்பரங்களில் மிகமிகப் பிரபல மான சினிமா நட்சத்திரங்கள் கையில் அந்தந்த கம்பனிகளின் தாயாரிப்புகளை யும் தூக்கிக் கொண்டு வீடு வீடாகச் சென்று கழிப்பறைகளை கழுவியும் காட்டுகிறார் கள். கோடிக்கணக்கான ரூபாக்கள் செல வில் இந்த விளம்பரங்களுக்காக செலவி டப்படுகிறது. ஆயினும் என்ன நடுவீடுவரை மலசலகூடங்களின் மணம் வந்து தொலைக் கிறதே என குறைப்பட்டார் என் நண்பர் ஒருவர்.

இன்னும் எமது சமையல் பாத்திரங் களை கழுவவென்றே எல்லா வீடுகளிலும் முற்றத்தில் ஓர் இடம் இருக்கும். அதில் ஒரு வாழையோ அல்லது தென்னையோ நிற்கும். அருகிலேயே கழுவிய பாத்திரங் களை வெய்யிலில் கவிழ்த்து வைக்க ஒரு பரணும் இருக்கும். கழுவிய நீர் அந்த வாழையைக் கடந்து சில மரங்களுக்கோ

சிறு பயிர்களுக்கோ போகும். அவையும் வளர்ந்து பயன் கொடுக்கும்.

இன்று அந்த சட்டிபானைகளும் பானை ஏது? எல்லாமே சட்டிதான் வீட்டுக்குள்ளேயே கழுவிக்கவிழ்க்கிறார்கள் அவை வெய்யிலைக் காண்பது கிடையாது. ஆனால் கிருமிகள் வருமே அதற்கான சாம்பூ, தும்பு, சோப் வகைகள் என்பன பலவிதங்களில் பல வண்ணங்களில் தேய்க்கும் சாதனத்துடன் விற்பனையாகின்றன. இன்னும் ஒரு சிறப்பு என்னவெனில் இப்போது பாத்திரங்களைக் கழுவும் வேலைகளை ஆண்களே செய்வதாக ஒரு காட்சியமைப்பு. படிப்படியாக அந்த பிம்பம் உருவாகி வருகிறது.

எவ்வளவுதான் பெண்கள் காலங்காலமாக சமையலை செய்தாலும். பெரிய சமையற்காரராக இன்னும்கூட ஆண்களே இருப்பது போல, இந்த ஆண்கள் மலசலகூடங்களையும் பாத்திரங்களையும் வீடுகளையும் கழுவும் உபகரணங்களின் விற்பனைக்கு சேவையாற்றி தமது மதிப்பை ஒரு படி மேலேற்றியுள்ளனர்.

இதெல்லாம் வியாபார தந்திரங்கள் எனத் தெரிந்த எமது மக்கள் அவற்றை தமது மதிப்பை சமூகத்தில் நிலைநாட்வே உறுதி கொண்டு இவற்றை வாங்கி பயன்படுத்தியே ஆகவேண்டும். ஒருவர் வீட்டுக்குள் நுழைந்து விட்டால் அவரது எந்த தேவைக்கும் வெளியே வரவே தேவையில்லை என்கிற அளவுக்கு வீட்டுக்குள்ளேயே எல்லாவசதிகளும் செய்திருந்தாலும் துர்நாற்றம் வீசுவதை எதுவும் செய்ய முடியவில்லை.

ஆனால் அவற்றுக்கும் பிள்ளையைக் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டாமல் விடுவார்களா தயதரிப்பாளர்கள்? புயல் வேகத்தில் வந்து கொண்டிருக்கின்றன. உங்களுக்கு மிகவும் பிடித்த ஒடு நடிகையோ அல்லது நடிகரோ அதை தூக்கிக் கொண்டு உங்கள் தொலைக்காட்சியில் வருவார். ஏன் அச்சம். ஆணம். வருகிறதா?

அட வரட்டுமே அந்த மணத்தை அப்படியே அமுக்கிவிட்டு நறுமணத்தைப் பரப்ப வல்ல சாதனங்களும் வந்துகொண்டிருக்கின்றன. அந்த சுகந்த மணத்தில் வீட்டிலுள்ள துடைப்பங்கட்டை கூட மயங்குவது போல ஒரு விளம்பரம் வருகிறது.

வீட்டுக்கு விருந்தினர் வருகிறார்களா? அப்படியானால் வீடு முழுதும் சுகந்தம் பரப்ப ஒரு சாதனம். இந்த புதுக் கூத்துகளைப் பார்க்கும் போது எனக்கு என் சிறு வயது நினைவுகள் வருவதை தடுக்க முடிவதில்லை. அவ்வளவுக் கெல்லாம் நாங்கள் சுகாதாரப் பழக்கங்களுடன் வாழ்ந்தவர்கள் அல்ல. ஆனால் சுத்தமான புல் மேயும் பசுவின் பசும் சாணத்தால் வீடுகளை மெழுகி சாம்பிராணிப் புகை போட்டு ஒரு பத்திக் குச்சையும் கொழுத்தி வைத்தால் வருமே ஒரு நறுமணம் அதற்கு இணையாக இன்றுவரை ஒரு மணத்தை நான் சுகிக்கவில்லை.



செயற்கையாக நாம் பெறும் இந்த வாசனைப் பொருட்கள் எமக்கு கேடு விளைவிக்கும் என்பதை நான் சொன்னால் அதை யாரும் நம்பப் போவதில்லை. வீடு முழுதும் சலவைக்கற்களைப் பதித்துவிட்டு அதில் மண்படாமல் இருக்க தாம் வெளியே புழங்கும் முற்றத்திற்கும் கல்லடுக்கி புல்முளைக்க தடைபோடும் காலம் இது. பெரும்பாலான செல்வந்தர்கள் தமது பாதங்களை தரையில் வைப்பதில்லை. அதைவிட அவர் தாம் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக நினைப்பு வேறு..

காலம் முழுதும் விவசாயமே தொழிலாக கொண்ட மக்கள் காலில் எப்போதும் காயங்களுடன்தான் இருப்பார்கள். என்னப்பா? என்று கேட்டால் பலதரப்பட்ட பதில்கள்கள் வரும். 'அது கட்டை கிழிச்சுப் போட்டுது.' 'அதா கல்லடிச்சிட்டுது.' 'சும்மா தகரம் வெட்டிப்போட்டுது.' 'இதோ தொட்டாவாடி வயல்ல வேலை அதுதான்' 'மண்வெட்டி காலுக்கேகிற்றுது.' என்பதாக என்ன பதில் தந்தாலும் அவர்கள் அந்தப்புண்ணுக்காக வைத்தியசாலைக்கு செல்வதில்லை மிக குறைந்தளவில் ஒருசிலருக்கு அவை பெருதாகி பிரச்சினையாகிவிட்டால் மட்டும் எங்காவது நாட்டுவைத்தியரை நாடியோ தாமாகவோ மருந்து போடுவார்கள். பொதுவாகவே கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. " கழுதைப்புண்ணுக்குப் புழுதி மருந்து" என்று. எப்படிப்பட்ட காயமானாலும் அது சேற்று வேலைக்காலமானால் சேற்றில் நின்றாலே ஆறிவிடும் இது எனது அனுபவம் கூட. காரணம் எந்த வகையிலும் மூலிகைகள் அழுகிய சேறாக வயல் சேறு இருப்பதுதான் காரணம்.

காடுகளையே மலசல கூடமாக பாவித்த மனிதர்கள் குளக்கட்டுகளை கோவிலாகவும் வயல்களை வழிபாட்டு இடமாகவும் வைத்திருப்பர். அங்கே யாரும் அசுத்தம் செய்வதில்லை. பொருளாதாரரீதியாக நமது செலவுகளை நாம் விரிவு படுத்திக் கொண்டோம். எம்மால் கழுவி சுத்தம் பண்ண முடியாத அளவுக்கு கடல்போல வீட்டைக்கட்டி அதை கூட்டவும் பெருக்கவும் ஒட்டடை அடிக்கவும் கூலியாள் தேடி அதை அழகாக ஆக்குவதற்கு செயற்கையான பிளாஸ்டிக் மலர்த்தொட்டிகளையும். வாசனையே இல்லாத குரோட்டன் செடிகளையும் விலை கொடுத்து வாங்கி நட்டுப்பராமரித்து அவற்றில் எந்தப் பயனுமில்லை எனத் தெரிந்தும் எம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு வாழ்கிறோம்.

> "இன்றைய உலகம் எமது பாதுகாப்பை உறுதி செய்வதை விட, இதற்கான உபகரணங்களை விற்பதில் பெரும் இலாபமீட்டி வருகின்றது. நாம் வீட்டுக்குள்ளேயே குளிக்கவும் மலசலங் கழிக்கவும் தொடங்கி வெகுகாலமாகிவிட்டது. எனவே அதற்கான சுகாதாரப் பழக்க வழக்கங்களையும் மாற்றி வருகிறோம்"



# இலாபம் தரும் தேக்கு மர வளர்ப்பு முறை

ஆனந்தன் பிரேம்நாந்
லக்சி பண்ணை



தங்கத்தை விரும்பாத பெண்கள் இல்லை என்பதைப் போல தேக்கு மரத்தை நட விரும்பாத விவசாயிகளைப் பார்ப்பதும் கடினம்.

அதிகமான விவசாயிகளுக்கு தேக்கு மரங்களை நடுகை செய்வதற்கு அதிக விருப்பம் இருந்தும் நிலப் பற்றாக்குறை, மற்றும் தங்களுடைய காணிகளுக்குரிய சரியான ஆவணம் இன்மை காரணமாகவும் நடுகை செய்யப்படுவதில்லை.

மதிப்பு வாய்ந்த மர இனங்களில் தேக்கு மரமும் ஒன்றாக உள்ளது. இதன் தாவர அறிவியல் பெயர் “டெக்டோனா கிராண்டிஸ்”. கிரேக்க மொழியில் “டெக்டன்“ என்றால் தச்சருக்கு உரியது என்பதாகும். “கிராண்டிஸ்” என்றால் பிரமாதமானது என அர்த்தமாகும். அதாவது இந்த மரம்

“தச்சர்களுக்கு உகந்த பிரமாதமான மரம்” என்பதாகும். தேக்கு ஓங்கி வளர்வதுடன் மிகவும் உறுதியானதுமாகும். ஆனால், அதன் வளர்ச்சி அது நடப்படக்கூடிய நிலத்தைப் பொறுத்தே அமைகிறது. மனிதர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் மரங்களில் முதன்மையானது தேக்கு. விலை மதிப்புமிக்க மரம் தேக்கு.

அந்த காலத்தில் தேக்கு மரங்கள் பயன்படுத்தி வீடு கட்டுவது ஒரு கௌரவமாக கருதப்பட்டது. தெற்கு ஆசிய நாடுகளிலே அதிக அளவில் தேக்கு மரங்கள் நடுகை செய்யப்படுகின்றன.

அதிலும் குறிப்பாக பர்மாவில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேக்கு மரங்களே உலகில் தரங்கூடியதாக கருதப்படுகின்றன. பர்மாவிற்கு அடுத்தபடியாக இலங்கையில் அதிலும் குறிப்பாக மட்டு, அம்பாறை எல்லைப் பிரதேசத்தில் பெரியபுல்லுமலை,



மகாஓயா, மங்களகம போன்ற கிராமங்களில் உள்ள தேக்கு மரங்கள் உலக அளவில். தரத்தில் இரண்டாவது இடத்தில் உள்ளதாக (Sri Lankan Forest Department) அறிக்கையில் கூறப்படுகின்றது. தேக்கு ஒரு வெப்ப மண்டலப் பயிர்.

விதைகள் மூலமும், வேர்கள் மூலமும் இனப்பெருக்கம் செய்யப்பட்டு வருகிறது. அதிகப்படியாக ஆடி மாதத்திற்கு பிற்பாடு நடவு செய்யப்படுகிறது. தேக்கு நடவு செய்யும்பொழுது கன்றுக்குக் கன்று 10 அடி இடைவெளி இருக்குமாறு நடவேண்டும். இந்த இடைவெளிக்கும் குறைவாக நடப்பட்டால் தேக்கு மரத்தின் சுற்று வட்டத்தின் விட்டம் பெருக்காமல் மெல்லியதாக நின்று வளர ஆரம்பிக்கும்.

40 வருடங்கள் ஆனாலும் நான்கு அடி சுற்றளவு உள்ள மரத்தினை பெற இயலாமல் போய்விடும். குழியின் அளவு 1.5×1.5 அடி இருக்கவேண்டும். அப்போது தான் மரங்கள் விரைவாக பெருக்கும். குழிக்குள் 100 g சுண்ணாம்பு தூள், 2 கிலோ மக்கிய உரம் இவற்றை சிறிது அளவு மண்ணுடன் கலந்து தேக்கு கன்றுகள் நட வேண்டும். தேக்கு நட்டு 25 வருடங்களுக்கு பிறகு வெட்ட தயாராகி விடும். எந்த அளவிற்கு தேக்கு மரத்தின் அறுவடை காலம் அதிகரித்துக் கொண்டு செல்லப்படுகின்றதோ அந்த அளவிற்கு தேக்கு மரத்தின் தரம் அதிகமாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. தேக்கு மரங்களை நடுகை செய்யும் பண்ணையாளர்கள் தங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால நன்மை கருதியே நடுகை செய்கின்றார்கள்.



தேக்கு ஓங்கி வளர்வதுடன் மிகவும் உறுதியானதுமாகும். ஆனால், அதன் வளர்ச்சி அது நடப்படக்கூடிய நிலத்தைப் பொறுத்தே அமைகிறது. மனிதர்களால் அதிகம் பயன்படுத்தப்படும் மரங்களில் முதன்மையானது தேக்கு. விலை மதிப்புமிக்க மரம் தேக்கு.

காரணம் தேக்கு மரம் ஒரு நீண்ட கால பயிர் என்பதனால். ஓர் ஏக்கருக்கு 400 மரங்கள் நடலாம் 25 வருட முடிவில் ஒவ்வொரு மரமும் ஐந்து அடி சுற்றளவுக்குமேல் இருந்தால் இதன் பெறுமதி இலங்கை ரூபா 400 இலட்சம் ஆகும்.

மண் தன்மைக்கு ஏற்றபடி தண்ணீர் பாய்ச்சவேண்டும். சதாரணமாக இரண்டு வகையான நோய்கள் இம் மரங்களை தாக்கும். இலைகளை கடித்து உண்ணும் புழுக்கள் மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சி. தேக்கில் இந்த தாக்குதல் ஏற்படும் போது நல்ல மழை பெய்தால் தானாகவே பூச்சி தாக்குதல் சரியாகி விடும். தேவைப்பட்டால் முதல் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு மட்டும் ஒவ்வொரு 6 மாதங்களுக்கு ஒரு தடவை மண்புழு உரம், அல்லது மாட்டு எரு, கோழி எரு, ஆட்டு எரு, போன்ற இயற்கை உரத்தினை மரத்தின் வேரில் இடலாம், இதை அவரவர் வசதிக்கேற்ப செய்யலாம்.

ஆனால் 90 விதமான விவசாயிகள் தேக்கு மரங்களுக்கு உரம் இடுவதில்லை. தேக்கு மரம் நடப்பட்டு இரண்டு வருடத்திற்கு பிற்பாடு அதன் சிறிய சிறிய பக்க கிளைகளை மட்டும் வெட்டி விட்டு 35 அடி வரை நேராக வளர விட வேண்டும். அதன் பிறகு சிறிது நன்றாக வளர்ந்த உடன், அதாவது அடி மரம் நம் முழங்கால் அளவு பருமன் வந்தவுடன். அதாவது ஒரு அடி சுற்றளவிற்கு மேல் வந்த உடன் நிலத்தில் இருந்து 35 அல்லது 40 அடி உயரத்தில் தலையை துண்டாக வெட்டி விடுவதன் மூலம் மரம் உறிஞ்சும் சத்துக்கள் அனைத்தும் மரத்தின் நடுப்பகுதி பருமன் அடைய உதவும். (இது அதிகமானோர் அறியாத விடயம்) பிறகு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெட்டப்பட்ட தலைப்பகுதியில் இரண்டு அல்லது மூன்று பக்கக் கிளைகளை நிரந்தரமாக விட்டு விட்டு அதற்குக் கீழ் நிலம் வரையிலான அனைத்து பக்க கிளைகளையும் ஐந்து சென்டிமீட்டர் (5cm) விட்டு வெட்டி விடவேண்டும்.

இவ்வாறு செய்வதனால் 20 வருடங்களில் நான்கு அல்லது ஐந்து அடி சுற்றளவிற்கு மரத்தின் நடுப்பகுதி வந்துவிடும். செம்மண்ணில் நடப்படும் தேக்கு மரங்கள் விரைவில் வளரும். மேலும் மரம் விரைவாக வைரம் பாயும். பத்து வருடங்களுக்கு பிறகு வைரம் பாய ஆரம்பிக்கும். திசு வளர்ப்பு முறையில் பெறப்படும் கன்றுகள், விரைவாகவும் மிக அதிகமாகவும் மரங்கள் பெருக்கும், நன்கு வளர்ந்த மரங்களை இருபத்தைந்து வருடங்களுக்கு



பின்னர் வெட்ட ஆரம்பிக்கலாம். வீட்டு தேவைக்கு வெட்டிய மரங்களாக இருந்தால் குறைந்தது ஐந்து மாதம் நிழலில் காய வைக்கவேண்டும்.

பின்னர் தான் இயந்திரத்தில் அறுக்க வேண்டும். மாறாக ஈரத்தில் மரத்தினை அறுத்தால். வெட்டப்பட்ட கட்டை நாள்போக்கில் வளைந்து விடும். அடுத்து தேக்கு மரங்களில் கரையான் அரிப்பது அரிதானது.

1. தேக்கு மரங்களை நடுகை செய்ய விரும்பினால். காடுகள் சார்ந்த இடங்களில் அல்லது புறம்பான இடங்களில் நட வேண்டும்.

2. வீட்டு தோட்டத்தில் நடுகை செய்யக் கூடாது. காரணம் தேக்கு மரங்கள் ஆனவை மண் வளத்தையும் நீர் வளத்தையும் அதிக அளவில் எடுத்துக் கொள்ளக்கூடிய பயிராகும் ஆகையால் வீட்டுத் தோட்டங்களில் நடப்பட்டால் நடப்பட்ட தேக்கு மரத்திலிருந்து 36 அடி சுற்றுவட்டத்தில் வேறு எந்த பயிரையும் நடக்கூடாது.

3. எந்த ஒரு தோட்டத்திலும் தேக்கு மரங்களை ஊடுபயிராக நடக்கூடாது மாறாக நடப்பட்டால் அருகிலுள்ள அனைத்து மரங்களும் காய்ப்புத்திறனை குறைத்து மலட்டுத்தன்மை ஆக்கப்படும்.

4. உங்களுக்கோ அல்லது உங்கள் உறவினர்களுக்கோ சொந்தமான காணியில் தேக்கு மரங்களை நட விரும்பினால் கட்டாயம் அக்காணிக்குரிய அனைத்து ஆவணங்களும் இருக்க வேண்டும். காரணம் தேக்கு மரங்கள் நடப்பட்ட காணிக்குரிய சரியான ஆவணம் இல்லாதிருந்தால் எதிர்காலத்தில் தேக்கு மரங்களை அறுவடை செய்வதற்குரிய அரசு அனுமதி முற்றாக மறுக்கப்படும் என்பதனையும் நினைவில் வையுங்கள்.

5. தேக்கு மரம் நட விரும்பினால் மணல் பாங்கான இடங்களை தவிர்த்து கடினமான கரடு முரடான மேட்டு நிலத்தை தேர்வு செய்து நட வேண்டும். எந்த அளவுக்குத் தேக்கு மரம் நடப்பட்ட நிலம் அடர்த்தியாக இருக்கின்றதோ அந்த அளவிற்கு தேக்கு மரமும் தரமானதாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. 6. நீரூற்று அதிகம் உள்ள இடங்களிலோ அல்லது வயல் நிலங்களிலோ அல்லது பள்ளமான நிலங்களிலோ நடுகை செய்யக்கூடாது. மேலதிக ஆலோசனை தேவை எனில் தொலைபேசி ஊடாக எம்மோடு தொடர்பு கொள்ளவும்.

**தொலைபேசி - 0770239784**
**WhatsApp - 0769196445**

# நம்மை நாம் ஒரு பிராண்டாக வளர்த்தெடுப்பது எப்படி?



**- தி.தெய்வநாயகம் -**

உலகப் புகழ்பெற்ற நாடக ஆசிரியரான பெர்னாட்ஷாவை, இளம் எழுத்தாளன் ஒருவன் சந்தித்தான். “நான் அதிகம் சம்பாதிக்க வேண்டும். அதற்கொரு வழி சொல்லுங்களேன்” என்று கேட்டான்.

“அது ரொம்ப சுலபமாச்சே. நீ விரும்பும் தொழிலைத் தேர்ந்தெடு. அந்தத் தொழில் மூலம் ‘புகழ்’ எனும் மரத்தை வளர்த்து வா. நிச்சயம் ஒரு நாள் இந்தப் புகழ் மரத்தில் பணம் காய்க்கும். அப்போது அதைப் பறித்துப் பயனடையலாம்!” என்று புன்னகையுடன் சொன்னார் பெர்னாட்ஷா.

அவருக்கு நன்றி கூறிவிட்டுப் புறப்பட எத்தனித்த இளைஞனை நிறுத்திய பெர்னாட்ஷா, “ஆனால் ஒரு விஷயம்… பணம் எனும் பழங்களைப் பறித்துச் சாப்பிட ஐந்து விநாடிகள்கூட ஆகாது. ஆனால், ‘புகழ்’ எனும் மரத்தை வளர்க்கப் பல ஆண்டுகள் ஆகலாம்” என்றார்.

உண்மைதானே! இன்றைய போட்டிகள் நிறைந்த சூழலில் நம்மை நாம் நிலைநிறுத்திக்கொள்ள அதீத சிரத்தை தேவை. இந்தக் கார்ப்பரேட் யுகத்தில் ஒவ்வொருவருக்கும் பிராண்ட் பிரமோஷன் அவசியமாகிறது. நம்மை நாம் ஒரு பிராண்டாக வளர்த்தெடுப்பது எப்படி?

முதலில் பிரச்சினைகளைக் கையாளத் தெரியவேண்டும். வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் பிரச்சினைகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

முதலாவது, நமக்கு நாமே ஏற்படுத்திக்கொள்ளும் பிரச்சினைகள். நம் பேராசையால், கோபத்தால், அவசர புத்தியால், தவறான முடிவுகளால் நாமே உருவாக்கிக்கொள்ளும் பிரச்னைகள் இவை. அடுத்து, நம் நண்பர்களால், விரோதிகளால், நம்மைச் சுற்றியுள்ள நம்பத்தகாத மனிதர்களின் சேர்க்கையால் நமக்கு ஏற்படும் பிரச்சினைகள். மூன்றாவதாக, எதிர்பாராத காரணங்களால், நம்மால் கட்டுப்படுத்த முடியாத சந்தர்ப்ப சூழ்நிலைகளால் உருவாகும் பிரச்சினைகள் ஆகும்.

இவற்றில் முதல் இரண்டு வகை பிரச்சினைகளிலிருந்து வெளிவர நமது விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் பெரிதும் உதவும். தவறுகளை நினைத்து வருந்தி, திருத்திக்கொள்ள நினைக்கும் மனப்பாங்கு இருந்தால், இத்தகைய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மகத்தான சக்தி நம்முள் உண்டாகும்.

மூன்றாவது நம் கைமீறிய பிரச்சினைகள். இவ்வகைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள, அளவுகடந்த தன்னம்பிக்கையும் வைராக்கியமும் மன உறுதியும், சகிப்புத்தன்மையும் தேவைப்படும்.

அது ஒரு பரந்த கடல். கரையை விட்டு வெகுதூரத்தில் பொங்கி எழுந்த கடலலை ஒன்று தன்னை வருடிச் சென்றுகொண்டிருக்கும் காற்றை அனுபவித்தவாறு பெருமிதத்தோடு ஆகாயத்தைப் பார்த்தது. அதன்பின், தூரத்தே தெரியும் கடற்கரையைப் பார்த்தது. கரையில் மோதிச் சிதறி

> எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. சிறிதுநேரம் விலகியிருந்து, மனத்தை நிர்மலமாக மாற்றி, ஆழமாகச் சிந்தித்தால், விடை காணமுடியும் மாறாக, அதிலேயே முழுவதுமாக மூழ்கினால், மூச்சுத் திணறிப் போய்விடுவோம்! நம்மால் எதையும் தீர்க்கமுடியும் என நம்புவதுதான், அந்தப் பிரச்சினைக்கான காரணங்களையும், அவற்றைப் போக்கும் விதங்களையும், அவற்றால் ஏற்படுகிற எதிர் வினைகளையும் அலசி ஆராய்வதற்கு உதவியாக இருக்கும்.

நுரையாகி, கடற்கரை மண்ணைத் தொட்டு மறைந்துகொண்டிருந்த மற்றோர் அலையையும் பார்த்தது. ‘கடவுளே! அலைகளின் நிலை இப்படித்தான் முடியுமா? அந்த அலையைப் போலவே நானும் கரையைத் தட்டி, நுரையாகி மறைய வேண்டுமா?’ என்று வருத்தத்துடன் வாடியது.

அப்போது, அந்த அலையைத் தொடர்ந்து, கடலின் நடுப்பகுதியிலிருந்து மற்றோர் அலை புரண்டு வந்தது. அது முதல் அலையின் வருத்தத்தைப் புரிந்துகொண்டு அதனிடம், ‘ஹநண்பா! அழிந்து விடுவோம், மறைந்து விடுவோம் என இல்லாததையெல்லாம் நீயாக ஏன் கற்பனை செய்து

பயப்படுகிறாய்? முதலில், நீ தனியானவன் அல்ல் கடலின் ஓர் அங்கம். கடல் இருக்கும் வரை நீயும் நானும் இருப்போம்!" என்றது!

முதல் அலை எதைப் பிரச்சினையாகக் கருதிப் பயந்து வருந்தியதோ, அந்தப் பிரச்சினை இப்போது மாறிவிட்டது. ஒரு பிரச்சினையின் காரணத்தைப் புதிய பரிமாணத்தில் பார்க்கும்போது, பிரச்சினை தானே மறைந்துவிடுகிறது.

சமீபத்தில் நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவரின் மகன் என்னிடம் வந்தான். ஹஹமாமா! உங்களுக்கு ஒரு சவால். இங்கே இந்த ரூம்ல உள்ள சிவப்பு நிற பொருள்களை எல்லாம் நல்லா பார்த்துக்கோங்க..." என்றான். நானும் ஒப்புக் கொண்டேன். சில விநாடிகள் நேரம் அளித்தவன், சட்டென்று என் கண்களைப் பொத்திக்கொண்டான்.

"நீங்கள் பார்த்த ரெட் கலர் பொருள்கள் என்னென்ன, எங்கெங்கே இருக்குன்னு சொல்லுங்க..." என்றான். நான் கவனித்த சிவப்பு நிற பொருள்களையும் இடங்களையும் பட்டியலிட்டேன்.

சட்டென்று இரண்டாவது கேள்வி கேட்டான், "இப்ப மஞ்சள் கலர் பொருள்கள் எங்கே இருக்குன்னு சொல்ல முடியுமா?"

நான் திகைத்தேன். "அதைக் கவனிக்கலையே" என்றேன். உடனே அவன் "என்ன மாமா... ஒரு அசைன்மென்ட் கொடுத்தா... எல்லாவற்றையும் கவனிக்கணும். சொன்னதை மட்டுமே செய்ய நாம என்ன கம்ப்யூட்டரா?" எனக் கேட்டான். எனக்குச் சுருக்கென்றது! என்னால் மஞ்சள் நிறப் பொருள்கள் குறித்துச் சொல்ல முடியாமல் போகக் காரணம் என்ன?

காரணம் மிக எளிமையானதுதான்! கொடுத்த நேரத்தில் நான் தேடியது சிறுவன் சொன்ன வண்ணத்தை மட்டுமே. நாம் எதைத் தேடுகிறோமோ அது மட்டும்தானே நம் கண்ணுக்குத் தெரியும். இப்படித்தான் பிரச்சினைகளைக் கண்டு மலைக்காமல் அவற்றின் ஊடே தீர்வுகளைத் தேடவேண்டும்!

எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு உண்டு. சிறிதுநேரம் விலகியிருந்து, மனத்தை நிர்மலமாக மாற்றி, ஆழமாகச் சிந்தித்தால், விடை காணமுடியும் மாறாக, அதிலேயே முழுவதுமாக மூழ்கினால், மூச்சுத் திணறிப் போய்விடுவோம்!

நம்மால் எதையும் தீர்க்கமுடியும் என நம்புவதுதான், அந்தப் பிரச்சினைக்கான காரணங்களையும், அவற்றைப் போக்கும் விதங்களையும், அவற்றால் ஏற்படுகிற எதிர்வினைகளையும் அலசி ஆராய்வதற்கு உதவியாக இருக்கும்.

அதேபோல், மற்றவருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்ப்பதையும் அறவே தவிர்த்துவிடவேண்டும். சமீபத்தில் படித்த சுவாரஸ்யமான கதை ஒன்று...

ஆராய்ச்சியாளர் ஒருவர் சிறு சிறு வேலைகளைச் செய்ய இரண்டு குரங்குகளைப் பழக்கி வைத்திருந்தார். கூண்டில் இருக்கும் சிறு சிறு கற்களை எடுத்து ஆராய்ச்சியாளருக்குக் கொடுத்தால், அவர் பதிலுக்கு ஒரு வாழைப்பழத் துண்டைப் பரிசளிப்பார்.




ஒருநாள் முதல் குரங்கு அப்படியொரு கல்லை அவருக்கு எடுத்துக் கொடுக்க, பதிலுக்கு அதற்கு ஒரு சிறிய வாழைப்பழத் துண்டைப் பரிசாகக் கொடுத்தார். இரண்டாவது குரங்கு இப்போது ஒரு கல்லை எடுத்துக்கொடுக்க அதற்கு ஒரு பெரிய பழத் துண்டைக் கொடுத்தார். இதைப் பார்த்துக் கொண்டே இருந்தது முதல் குரங்கு. இம்முறை அது இன்னும் வேகமாக ஒரு கல்லை எடுத்துக்கொடுத்தது.

ஆனால்... முன்னர் கொடுத்தது போல அதற்குச் சின்னத் துண்டே கொடுக்கப்பட்டது. கடுப்பான குரங்கு, அந்தப் பழத்தை விசிறியடித்து ஆர்ப்பாட்டம் செய்தது. தன்னளவில் திருப்தியாக இருந்தவரை அமைதியே உருவாக இருந்த குரங்கு தன்னைப் பிறரோடு ஒப்பிடத் தொடங்கும்போது வேறோர் ஆளாக மாறிவிடுகிறது.

நம் மனமும் இப்படித்தான். மற்றவர்களின் வளர்ச்சியை, திறமைகளை, சாதனைகளை முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளாது பொறாமையில் பொசுங்கிப் போகும். கழிவிரக்கத்திலும் தாழ்வு மனப்பான்மையிலும் உழன்று தவிக்கும். ஆகவே, எதன்பொருட்டும் உங்களை வேறு ஒருவரோடு ஒப்பிடாதீர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் தனித்திறமைகள், தனித்த இயல்புகள் உண்டு. அதைக் கண்டுணர்ந்தால் போதும் குறிப்பிட்ட திறமைகளை வளர்த்தெடுத்துத் தனி பிராண்டாக ஜொலிக்கலாம்!

நிறைவாக ஒன்று... நல்ல தகுதியான விமர்சனங்களை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களைப் பற்றிய வீண் விமர்சனங்களைப் புறந்தள்ளுங்கள். எல்லோரையும் எல்லா விஷயங்களிலும் திருப்திப்படுத்த வேண்டும் என்று முனைப்புக் காட்டாதீர்கள். எல்லோரும் நம் சாதனைகளை ஏற்றுக்கொள்வார்கள் என்று சொல்லமுடியாது.

இளம் ஞானி ஒருவன் புதிதாக அந்தக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தான். சித்திகள் பல கைவரப் பெற்ற அவன், தனது தீர்க்கமான பேச்சாலும் நடத்தையாலும் எல்லோரையும் கவர்ந்தான். மக்களின் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வுகளை வழங்க, எல்லோருக்கும் அவனைப் பிடித்துப் போனது.

ஆனால், கிராமத்தில் இருந்த இரண்டு பூசாரிகளுக்கு அவனைப் பிடிக்கவில்லை. எப்போதும் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருந்தார்கள். ஒருநாள் பூசாரிகள் இருவரும் படகு மூலம் ஆற்றில் பயணித்து வேறொரு ஊருக்குச் செல்ல ஆற்றங்கரைக்குச் சென்றார்கள்.

அங்கே படகில் ஏற்கெனவே அந்த இளம் ஞானியும் அமர்ந்திருந்தான். இவர்கள் முகம் சுளித்துக்கொண்டார்கள் "இங்கேயும் வந்துவிட்டானா?" என்று முணுமுணுத்தபடியே படகில் ஏறிக்கொண்டார்கள். படகு புறப்பட்டது. சிறிது தூரம் கடப்பதற்குள், ஏதோ சத்தம். படகு பயணிப்பதில் சிரமம் ஏற்பட்டது. படகுக்காரன் எரிபொருள் தீர்ந்துவிட்டது என்றான்.


படகில் பள்ளிக்கூடம் செல்வதற்காக ஏறியிருந்த பிள்ளைகளும் அதிகம் பேர் இருந்தார்கள். வெகுநேரம் ஆற்றில் அப்படியே நிலைநிறுத்த முடியாது. படகுக்காரன் படகை விட்டுவிட்டுச் செல்ல முடியாது. எல்லோரும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்திருக்க, இளம்ஞானி யோசிக்கவே இல்லை... படகுக்காரனிடமிருந்து எரிபொருள் வாங்குவதற்கான குடுவையைப் பெற்றுக்கொண்டு சட்டென்று படகை விட்டு இறங்கினான். தண்ணீரில் நடக்க ஆரம்பித்தான்!எல்லோருக்கும் வியப்பு! ஆனால், அந்தப் பூசாரிகள் இப்படிச் சொன்னார்கள், "ஹே... பாரு... அவனுக்கு நீச்சல்கூடத் தெரியலை!"

தமிழர் பொருணமியம் வாரமலர் TAMILS ECONOMY



புதன்கிழமை
15.11.2023

# பால்மா தொடர்பான சர்ச்சைகள்



Dr.எஸ்.கிருபானந்தகுமாரன்
[BVSc,MVSc]
கால்நடை வைத்தியர், செட்டிகுளம்



1. குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுகள் **(infant formula)** தொடர்பான சர்ச்சைகள் - குழந்தை உணவில் பால் மாதான் முக்கியமான உள்ளீடு. அடிக்கடி நிகழும் உள்ளீடுகளின் தரம் தொடர்பான சர்ச்சைகள் மக்களை அச்சுறுத்துகின்றன. சீனாவில் இடம்பெற்ற மெலமைன் எனும் புரதம் போன்ற பதார்த்தத்தை சேர்த்தன் காரணமாக சில பச்சிளம் குழந்தைகள் இறந்தன. இதன் பின் உலகளாவிய ரீதியில் குழந்தை உணவுகளை நுகர்வது குறைந்தது.

இற்றை வரைக்கும் சீனாவில் உள்ளூர் பால் மா சேர்ந்த குழந்தை உணவுகளை அவர்கள் புறக்கணிக்கின்றனர். சீனாவில் சீனப் பால் மாவில் செய்யப்பட்ட குழந்தை உணவுகளை விட நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வரும் குழந்தை பால் உணவுகளுக்கு நல்ல கிராக்கி. பால் மாவின் சர்வதேச கேள்வி முறையில் நியூசிலாந்தின் பால்மாவினை அதிக விலைக்கு வாங்குகின்றனர். இதனால் சீனாவுக்கான ஏற்றுமதி கூடி இலங்கை போன்ற நாடுகளின் இறக்குமதியின் செலவு அதிகரிக்கின்றது.

மேலும், குழந்தை உணவுகளை தயாரிக்கும் நிறுவனங்கள் செய்யும் விளம்பரங்கள் உலக சுகாதார நிறுவனத்தால் **(WHO)** பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தாய்ப்பால் ஊட்டலை குறைப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. மனிதர்களின் வசதிக்காக குழந்தைகளுக்கு அவசியம் கிடைக்க வேண்டிய தாய்ப்பால் கிடைக்காத நிலைக்கு இந்த பால் மா சேர்த்த குழந்தை உணவுகளே காரணம் எனும் சர்ச்சை நிலவுகிறது. இது காரணமாக எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு பல உடல் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

2. ஊட்டச்சத்து தொடர்பான சர்ச்சைகள்- பாலில் காணப்படும் புரத மற்றும் கொழுப்பு பொருட்கள் அகற்றப் பட்டு பன்றிக் கொழுப்புகள், பாம்எண்ணெய், மெலமைன் போன்றவை சேர்க்கப்பட்டு பொய்யாக புரத மற்றும் கொழுப்பு பொருட்களின் சதவீதம் காட்டப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. பல பால் நிறுவனங்கள் இதனை மறுத்தாலும் இந்த சர்ச்சை பாரதூரமானது.

மேலும், பாலை வெப்பப்படுத்தி நீரை அகற்றும் செயன்முறை காரணமாக முக்கிய ஊட்டச் சத்துக்கள் அழிவடைவதும் மாற்றமடைவதும் பால் மா உற்பத்தியில்



நிகழ்வதால் அதன் தரம் தொடர்பாக கேள்வி எழுகிறது.

அத்துடன் அமைப்பு மாற்றமடையும் உள்ளீடுகள் பல நோய்களை தரக்கூடிய நிலையைத் தோற்றுவிப்பதாக மருத்துவ துறையினர் கூட குற்றம் சாட்டுகின்றனர்.

3. ஒவ்வாமை மற்றும் **lactose intolarance-** பொதுவாகவே மனித குடித்தொகையில் குறிப்பிட்ட சதவீதமானவர்களுக்கு **lactose intolarance** எனும்ஒவ்வாமை உள்ளது. இந்த வகையினர் பால்மாவுக்கும் ஒவ்வாமையை வெளிப்படுத்துகின்றனர். இது ஒரு சிக்கல் வாய்ந்த நிலையாகும்.

4. சேர்க்கப்படும் சேர்வைகள் தொடர்பான சர்ச்சைகள் - பல பால் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில், குறிப்பாக பட்டர் செய்யும் போது கொழுப்பும் , **Whey** புரதம் தயாரிக்கும் போது புரதமும் எடுக்கப்பட்டு அவற்றை பிரதியீடு செய்ய பன்றிக் கொழுப்பு மற்றும் பாம் எண்ணை, மெலமைன் சேர்க்கப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இது சுகாதார பிரச்சினைகளை மட்டுமின்றி சமய கலாச்சார சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது.

5. தரம் மற்றும் பாதுகாப்பு நியூசிலாந்து மேய்ச்சல் புல் வெளிகளுக்கு பாவிக்கப்படும் **DCP** போன்றவை பாலில் வருவதாக ஒரு சர்ச்சை எழுந்தது. இது பல நுகர்வோருக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

மேலும், சரியான தரக்கட்டுப்பாடு சகல பால் மா வகைகளுக்கும் பார்க்கப் படுகிறதா எனும் சர்ச்சை நிகழ்கிறது. பல நாடுகளில் இந்த தரக் கட்டுப்பாடுகள் எதுவும் செய்யப்படாது நேரடியாகவே சந்தைக்கு விடப்படுகிறது எனும் குற்றச்சாட்டு உள்ளது.

6. சூழலியல் பிரச்சினைகள். பால் மாவை உற்பத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மாடு வளர்ப்புச் செயன்முறைகள் பச்சை வீட்டு வாயுவான மெதேனை அதிகம் வெளி விடுகின்றன. இது உலக வெப்பமுறலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிகதிகமான பால் மாவை உற்பத்தி செய்யும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் பச்சை வீட்டு விளைவைத் தவிர நீர் நிலைகள் மாசுபடுதல் பயிர் நிலங்கள் மாசு படுதல் போன்ற பல சூழலியல் பிரச்சினைகளுக்கு இந்த பால் மா உற்பத்தியும் மாடு வளர்ப்பும் காரணமாக அமைகின்றன.

6. விலை தொடர்பான பொருளாதாரப் பிரச்சினைகள். இலங்கை போன்ற நாடுகளில் பால் மாவை நம்பித்தான் 60% ஆன பால் தேவை நிறைவு செய்யப்படுகிறது. இலங்கைக்கு பால் மாவை இறக்கும் பல்தேசிய நிறுவனங்கள் பால் மாவின் விலையை அடிக்கடி உயர்த்துவதும் உள் நோக்கத்துடன் சந்தைக்கு விடாமல் பதுக்குவதும் நுகர்வோரைக் கடுமையாக பாதிக்கிறது.

இப்படியான பல சர்ச்சைகள் இருந்தாலும் பால் மாவின் தேவைகள் அதிகதிகமாக உணரப்படுகின்றன. இலங்கை அரசாங்கமும் திரவப் பாலை நுகர்வதை ஊக்குவிக்கும் பல செயற்றிட்டங்களை கிராம, பாட



சாலை மட்டங்களில் செயற்படுத்துகிறது. நான் பல பாடசாலைகளில் கருத்தரங்குகளை நடாத்தியிருக்கிறேன். நான் அவதானித்த வரையில் பள்ளி மாணவரில் பலர் திரவப் பாலை விட பால் மாவினால் தயாரிக்கப்பட்ட பாலையே விரும்புகின்றனர். அதன் சுவையை விரும்புகின்றனர்.

இவை குறித்து அடுத்த வாரமும் ஆரோய்வோம்.

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆண்டு 2022இல் அதீத வளர்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டில் பால் உற்பத்தியானது ஒரு நாளைக்கு 7700 லீற்றர் பெறப்பட்டது. ஆனால் இவ்வருடம் ஒரு நாளைக்கு 14000 லீற்றர் பெறப்படுகின்றது.

அதே போல் விலையிலும் அதிகரிப்பு காணப்படுகின்றது. கடந்த வருடம் ஒரு லீற்றர் பாலின் விலை 56 ரூபாயாக இருந்தது. இவ் வருடம் 100, ரூபாவாக அதிகரித்துள்ளது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான பண்னையாளர்கள் தங்களது வாழ்வாதார மட்டத்தில் உயர்வு மட்டத்தினை அடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் மேய்ச்சல் தரையான மயிலத்தமடு, மாதவனை, கெவிளியாமடு ஆகிய பிரதேசங்களில் தற்போது வெளிமாவட்ட பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களை கொண்டு அத்துமீறிய பயிர்செய்கையும் திட்டமிட்ட குடியேற்றங்கள் இடம்பெறுவதால் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரைகளுக்கு மாடுகளை முழுமையாக கொண்டு செல்ல முடியாமல் திண்டாடுகின்றனறனர்.

இதனால் நெற்செய்கை காணிகளில் மாடுகள் மேயும் நிலை உள்ளதால் நெற்செய்கையும் இவ்வருடம் உற்பத்தியில் வீழ்ச்சியடையும், பால் உற்பத்தியும் வீழ்ச்சி யடையும் என்பதில் மாற்றுக்கருத்துகள் இல்லை.

மட்டக்களப்பு மாவட்டம் விசாலமான நீர்ப்பாசனக் குளங்கள் பலவற்றைக் கொண்டிருக்கிறது. இவற்றின் மொத்த நீரேந்து பரப்பு 576 சதுர மைல்களாகும். அங்கெல்லாம் நன்னீர் மீன்கள் பெருக்கம் அடைந்துள்ளன. வருட மொன்றுக்கு பாரிய நீர்ப்பாசனக் குளங்களிலிருந்து மாத்திரம் ஏறக்குறைய 850 மெற்றிக் தொன் மீன்கள் அறுவடை செய்யப்படுவதாக புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. பாரிய குளங்களைத் தவிர மத்திய தரக் குளங்களும், சிறு குளங்களும் இம் மாவட்டத்தில் இருக்கின்றன. அங்கும் நன்னீர் மீன் உற்பத்தி இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உன்னிச்சை, கட்டுமுறிவு, உறுகாமம், நவகிரி ஆறு, வாகனேரி என பல வற்றாத குளங்கள் காணப்படுகின்றன.

அக்குளங்களிலிருந்து தமது ஜீவனோபாயத் தொழிலாக நன்னீர் மீன்பிடியை மீனவர்கள் கைக்கொண்டு வருகிறார்கள். பாரிய குளங்களில் மாத்திரம் சுமார் 700 பேர் இவ்வாறு மீன்பிடித் தொழிலை கைக்கொண்டு வருகிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் 145 கிலோமீற்றர் நீளத்தினைக் கொண்டதாக கடல் வளம் உள்ளது. வாகரை தொடக்கம் பெரிய கல்லாறு வரையான பகுதிகளில் பெருமளவான பகுதிகள் தமிழர் பகுதிகளை சார்ந்தேயுள்ளன.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 26000 மீனவர் குடும்பங்கள் உள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் சுமார் 75வீதமான கடல் பகுதியானது தமிழர்கள் வாழும் பகுதியிலேயே உள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் பகுதிகளில் சுமார் 10000மீனவர் குடும்பங்களே உள்ளன. ஏனையவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் மற்றும் சிங்களவர்களாகவே காணப்படுகின்றனர்.

மட்டக்களப்பு முகத்துவாரம், பெரிய கல்லாறு முகத்துவாரம் பகுதிகள் இயற்கைத் துறைமுகப் பகுதிகளாக காணப்படுகின்றது. இப்பகுதியில் தமிழர்கள் முதலீடுகளை செய்து பாரியளவிலான படகுகளைக் கொண்டு மீன்பிடிகளை மேற்கொள்வதன் மூலம் பாரியளவிலான வருமானமீட்டக் கூடிய நிலையுள்ளது.

இவ்வாறான வழிகள் குறித்து புலம் பெயர் தொழில் முனைவோரும் தமிழ் தொழிலதிபர்களும் சிந்திக்க வேண்டிய தருணமாகும். மீன்பிடி நடவடிக்கைகள் முற்று முழுதாக மாற்று இனத்திற்கு செல்லுமானால் தமிழர்களின் இருப்பும் இல்லாமல் செல்லக் கூடிய நிலையுள்ளது. எனவே இது தொடர்பில் உரியவர்கள் சிந்திக்க வேண்டிய தருணமாக இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

தற்போது கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக நிலாவெளி முதல் பானம வரையிலான சுற்றுலா வலயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் கடந்த மாதம் மட்டக்களப்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறினார். இதனால் காடு மற்றும் ஏரி பகுதிகள் சுற்றுலாத்துறைக்காக மேம்படுத்தப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 10 வருடங்களில் திருகோணமலை நகரின் அபிவிருத்தி, மகாவலி ஏ மற்றும் பீ பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இந்த மாகாணங்களில் புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சினையான பால் பண்ணையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அவர் தெரிவித்த சுற்றுலாத்துறை அபிவிருத்தி என்பதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேச்சல் தரைகளை இலக்கு வைத்து மகாவலிதிட்டம் ஊடாக வெளிமாவட்ட பெரும்பான்மை இனத்தவரை திட்டமிட்டுக் குடியேற்றும் சதியே உள்ளது எனலாம். அவர் கூறிய இந்த அபிவிருத்தியில் உள்ளது என்பதை புரிந்து கொள்வேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்தை ஈட்டக்கூடிய விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடித் தொழில் மூன்றுமே மிகமுக்கியமான வருமானத்தை ஈட்டும் வளங்களாக காணப்பட்டாலும் மூன்று தொழில்களையும் சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத கெடுபிடிகளும் தடைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன.





# மண் வளம் காப்போம்

- ஆராஅமுதன் -
கீரிமலை

மண் வளம் என்பது தாவர வளர்ச்சியைத் தக்கவைத்து பயிர் விளைச்சலை மேம்படுத்தும் மண்ணின் திறன் ஆகும். இதை மண்ணுக்கு கரிம மற்றும் கனிம உரங்கள் மூலம் மேம்படுத்தலாம்.

அணு உத்திகள் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கும் அதே வேளையில் மண் வளத்தையும் பயிர் உற்பத்தியையும் மேம்படுத்தும் தரவை வழங்குகிறது.

வேளாண்மை முறைகளில் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்த ஒருங்கிணைந்த மண் வள மேலாண்மை அணுகுமுறை தேவைப்படுகிறது,

இது பயிர் உற்பத்தியை அதிகரிக்கிறது, அதே நேரத்தில் மண்ணின் ஊட்டச்சத்து இருப்புக்களை வெட்டுவதையும் மண்ணின் இயற்பியல் மற்றும் இரசாயன பண்புகளின் சிதைவையும் குறைக்கிறது. மண் அரிப்பு உட்பட நிலச் சீரழிவுக்கு வழிவகுக்கும்.

இத்தகைய மண் வள மேலாண்மை நடைமுறைகளில் உரங்களின் பயன்பாடு, கரிம உள்ளீடுகள், பருப்பு வகைகளுடன் பயிர் சுழற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட கிருமிகளின் பயன்பாடு ஆகியவை அடங்கும், இந்த நடைமுறைகளை உள்ளூர் நிலைமைகளுக்கு எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றிய அறிவு.

கூட்டு FAO/IAEA பிரிவு, மண் வளத்தை மேம்படுத்துவதற்கான அணுசக்தி அடிப்படையிலான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் உறுப்பு நாடுகளுக்கு உதவுகிறது, இதன் மூலம் பயிர் உற்பத்தியை தீவிரப்படுத்தவும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.

### மண் வளத்தை திறமையாக நிர்வகிக்க பல்வேறு அணுகுமுறைகள்

ஓர் ஒருங்கிணைந்த மண் வள மேலாண்மையானது ஊட்டச்சத்துக்களின் வேளாண்மைப் பயன்பாட்டின் செயல் திறனை அதிகரிப்பதையும் பயிர் உற்பத்தியை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. உயிரியல் நைட்ரஜன் நிர்ணயம் மற்றும் இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் வளத்தை அதிகரிக்கும் தானிய பயறு வகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் இதை அடைய முடியும்.

தானியத்திற்கான பருப்பு வகைகளாகவோ, பசுந்தாள் உரமாகவோ, மேய்ச்சல் நிலங்களாகவோ அல்லது வேளாண் காடுகளின் மரக் கூறுகளாகவோ வளர்க்கப்பட்டாலும், பருப்பு பயிர்களின் முக்கிய மதிப்பு வளிமண்டல நைட்ரஜனை சரி செய்யும் திறனில் உள்ளது, இது வணிக நைட்ரஜன் உரங்களின் பயன்பாட்டைக் குறைக்க உதவுகிறது. மண் வளம். ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையை உள்ளடக்கிய நிலையான விவசாய முறைகளுக்கு நைட்ரஜனை பொருத்தும் பருப்பு வகைகள் அடிப்படையாகும்.

நைட்ரஜன்-15 இன் பயன்பாடு விவசாய அமைப்புகளில் பல்வேறு குளங்களுக்கிடையேயான இயக்கவியல் மற்றும் தொடர்புகளைப் பற்றிய புரிதலை வழங்குகிறது, இதில் பருப்பு வகைகள் மூலம் நைட்ரஜனை நிலைநிறுத்துதல் மற்றும் மண் மற்றும் உரமான நைட்ரஜனைப் பயிர்களால் பயன்படுத்துதல், ஒரே மற்றும் கலப்பு பயிர் முறைகளில்.

மண்ணில் கரிமப் பொருட்களைச் சேர்க்கும் உறைப் பயிர்களைச் சேர்ப்பதன் மூலம் மண் வளத்தை மேலும் மேம்படுத்தலாம், இது மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்தி ஆரோக்கியமான, வளமான மண்ணை ஊக்குவிக்கிறது

பசுந்தாள் உரம் அல்லது பருப்பு வகைகளை பயிரிடுவதன் மூலம் காற்றில் இருந்து நைட்ரஜனை உயிரியல் நைட்ரஜனின் செயல்முறை மூலம் சரிசெய்வதுசரிசெய்தல் மைக்ரோ-டோஸ் உரப் பயன்பாடுகள் மூலம், தாவரங்களை உறிஞ்சுதல் மற்றும் பிற செயல்முறைகள் மூலம் இழப்புகளை நிரப்புதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட நீர் மற்றும் ஊட்டச்சத்து பயன்பாடு மூலம் பயிர் வேர்விடும் மண்டலத்திற்கு கீழே கசிவு மூலம் இழப்புகளை குறைப்பதன்



மூலம்.

அணு மற்றும் ஐசோடோபிக் நுட்பங்களின் பங்களிப்புநைட்ரஜன்-15 மற்றும் பாஸ்பரஸ்-32 ஐசோடோப்புகள் மண், பயிர்கள் மற்றும் நீரில் பெயரிடப்பட்ட நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் உரங்களின் இயக்கங்களைக் கண்டறியப் பயன்படுகிறது.

இந்த உரங்களின் பயன்பாடு, இயக்கம், எஞ்சிய விளைவுகள் மற்றும் மாற்றம் ஆகியவற்றின் செயல்திறன் பற்றிய அளவு தரவுகளை வழங்குகிறது. மேம்படுத்தப்பட்ட உரப் பயன்பாட்டு உத்திகளின் வடிவமைப்பில் இத்தகைய தகவல்கள் மதிப்பு மிக்கவை. நைட்ரஜன்-15 ஐசோடோபிக் நுட்பம் வளிமண்டலத்தில் இருந்து நிலையான நைட்ரஜனின் அளவை பருப்பு பயிர்கள் மூலம் உயிரியல் நைட்ரஜன் நிலைப்படுத்தல் மூலம் அளவிட பயன்படுகிறது.

கார்பன்-13 ஐசோடோப்பு கையொப்பம் மண்ணின் உறுதிப்பாடு மற்றும் கருவுறுதல் மேம்பாட்டிற்கான பயிர் எச்சங்களின் ஒருங்கிணைப்பை அளவிட உதவுகிறது. இந்த நுட்பம் மண்ணின் ஈரப்பதம் மற்றும் மண்ணின் தரத்தில் பயிர் எச்சங்களை சேர்ப்பது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளின் விளைவுகளையும் மதிப்பிட முடியும். இந்தத் தகவல், மண்ணின் கரிமப் பொருட்களுக்கு பல்வேறு வகையான பயிர்களின் தோற்றம் மற்றும் ஒப்பீட்டு பங்களிப்பை அடையாளம் காண அனுமதிக்கிறது.

மண் மாசுபடுத்தப்படும் போது, சுற்றுச் சூழல் அமைப்பின் சமநிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன.

தரையில் வீசப்படும் கழிவுகள், எண்ணெய் மற்றும் எரிபொருட் கழிவுகளைக் கொட்டுதல் போன்ற பல காரணங்களினால் மண் அதிகம் மாசுபடுத்துகிறது.

மண் மாசுபாடு பொதுச்சுகாதார பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது, விவசாயமும் பெரும் பாதிப்பை சந்திக்கின்றது. எனவே மண் மாசுபாடு தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருத்தல் வேண்டும்.

இறைவன் நமக்களித்த பல அற்புதமான வளங்களில் ஒன்றாக மண்வளம் உள்ளது. மனித சமுதாயத்தினுடைய வாழ்வும், மறைவும் மண் வளத்தைச் சார்ந்ததாகவே உள்ளது.

உலகில் மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் மண்ணை சார்ந்தே வாழ்கின்றன. எனவே மண் இல்லையேல் இல்லை மனிதன் இல்லை என்பது மிகையல்ல.

## பாதுகாக்கும் வழிமுறைகள்

மண் வளத்தை பாதுகாக்க, மண்புழு உரம், தொழு உரம், மக்கும் உரங்களை இட வேண்டும். எரு மற்றும் இயற்கை உரங்களை இட்டு, மண்வளத்தை பேணிக் காக்கலாம்.

மண்ணில் உள்ள பல்லுயிரிகளைப் பாதுகாப்பதன் மூலம் மண்ணை உயிர்த் தன்மையுடன் வைத்திருக்கலாம்.

மண்ணின் தன்மை அறிந்து உரமிடுதல் மூலம் மண் வளத்தை காக்க முடியும்.

மண்ணினுள் மக்காத பொருட்கள் குறிப்பாக பிளாஸ்டிக், பாலிதீன் போன்றவை கலப்பதை தவிர்க்க வேண்டும்.

தேவையற்ற இரசாயனங்களை மண்ணில் சேர்வதை தடுக்கும்போது மண் வளம் பாதுகாக்கப்படும்.

மண் வளம் நிறைந்த ஊரில் மனிதர்கள் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.

**இத்தகைய மண் வள மேலாண்மை நடைமுறைகளில் உரங்களின் பயன்பாடு, கரிம உள்ளீடுகள், பருப்பு வகைகளுடன் பயிர் சுழற்சி மற்றும் மேம்படுத்தப்பட்ட கிருமிகளின் பயன்பாடு ஆகியவை அடங்கும், இந்த நடைமுறைகளை உள்ளூர் நிலைமைகளுக்கு எவ்வாறு மாற்றியமைப்பது என்பது பற்றிய அறிவு.**

சங்க இலக்கியத்தில் 'உணவெனப்படுவது நிலத்தொடு நீரே' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உணவாய் மாறும் திறன் படைத்தவையே நிலமும், நீரும் என்பது இதன் பொருளாகும்.

அவ்வகையில் மண்வளத்தைப் பாதுகாப்பது உயிரினும் மேலான கடமை என்பதை உணர்ந்து செயற்படுவதுடன் வளமான மண்ணின் முக்கியத்துவத்தினை அனைவரும் உணர்ந்து நீடித்த நிலையான மண்வள மேம்பாட்டு முறைகளைப் பின்பற்றிட வேண்டும்.






# எங்கட ஆச்சி



- காரைக்கவி கந்தையா பத்மானந்தன் -

முந்திச் சின்ன வயசில தைப்பொங்கல் எண்டால் பொங்கல் வாழ்த்து அட்டையும் தீபாவளி எண்டால் தீபாவளி வாழ்த்து அட்டையும் ஒரு மாதத்துக்கு முதலே வேறை வேறை அளவுகளிலை கடையளுக்கு வந்திடும்.

கடைக்காறர் அதுகளை வடிவாக் கடைக்கு உள்ளையும் வெளியில விறாந்தையிலையும் கயிறுகட்டித் தொங்க விடுவினம். உப்பிடிக் கட்டிப்போட்டு ஆரும் கழட்டிக்கொண்டு போகாமல் கண்ணுக்கை எண்ணை விட்டுப் பாத்துக்கொண்டு இருப்பினம் .

ஏனெண்டால் எங்கட பெடியள் கண்ணுக்காலை போய் முழியுக்காலை போய் காட்டுகளை கோயில் இரவுத் திருவிழா நேரம் வீதியிலை நித்திரை கொள்ளுற பெடியளின்ரை வேட்டியை உருவுறமாதிரிக் கழட்டிக் கொண்டு போடுவாங்கள்.

நாங்கள் உந்தக்காட்டுகள் வாங்கிறதுக்கெண்டே அஞ்சாம் பத்தாம் எண்டு காசு சேர்க்கத் துடங்குவம்.

கடைக்கு சாமான் சக்கட்டு வாங்கப் போகேக்கை இனிப்பைக் கினிப்பை வாங்காமல் அந்தக் காசுகளை எல்லாம் காட் வாங்கவெண்டு உண்டியலிலை போடுவம்.

ஆராருக்கு காட் போடுறது எண்டு முதலே தீர்மானிச்சுப்போடுவம்.

அதில எங்களுக்குப் பிடிச்ச சேர்மார் ரீச்சர்மார் எல்லாரும் இருப்பினம். எங்கட கோவக்காறப் பெடிபெட்டையளுக்கு கடைசி வரையும் போடமாட்டம்.

நாங்கள் சிலர் எங்களுக்கையே நீ எனக்குப் போடு நான் உனக்குப் போடுறன் எண்டும் ஒப்பந்தம் செய்வம்.

சில நேரம் டட்லி செல்வா ஒப்பந்தம் மாதிரி உந்த ஒப்பந்தங்கள் சரிவராமலும் போகும்.

காட்டில எழுதின வசனங்களுக்குக் கீழை கையெழுத்து வைச்சு இல்லாட்டில் இருக்கிற வசனங்களோட எங்கட சொந்த வசனங்களையும் எழுதி கையெழுத்து வைப்பம்.

பேந்து வெள்ளை என்வலப்புக்கை அதை வைச்சு சோத்துப் பசையால இல்லாட்டில் கோதுமைப்பசையால இல்லாட்டில் வேப்பம் பிசினால ஒட்டிப் பேந்து பசை அங்கால இஞ்சால பரவாம பழந்துணியால துடைச்சு வாயால ஊதிக்காயவைச்சுக் கொண்டு போய் தபால்பெட்டியில போட்ட பிறகுதான் நிம்மதி வரும்.

ஆருக்கு கனக்க காட் வருகுது எண்டு எங்களுக்கை ஒரு போட்டியே இருக்கும். கனகாட் கிடைச்சவர் பெரிய கெப்பரில திரிவினம்.

உப்பிடிக் கனகாட் வேணும் எண்டதுக்காக எங்களுக்கு நாங்களே காட்போடுறதும் நடக்கும். காட்டுகள் பல விலையிலையும் பல அளவுகளிலையும் இருந்தது. சில காட்டுகள் உள்ளுக்குப் பிரிச்சாப்படம் வாறமாதிரி எல்லாம் இருக்கும். சில பெடியள் வேணுமெண்டே எங்களுக்கு பட்டநதெளிக்கிற பெட்டையளுக்கு எங்கட பெயரில காட்போடுவாங்கள்.

சில நேரம் உது வாத்திமாரிட்டைப் போய் குண்டியில கொய்யாத் தடியால நல்ல சாத்துப்படி விழும். சில நேரம் தாய் தேப்பன் மட்டத்திலையும் சண்டையள் வரும்.

முந்திக் கன அச்சகங்கள் முக்கியமாகச் செய்யிற வேலையே கலண்டர் டயறி அடிக்கிறதோட உந்தக்காட்டுகளும் அடிக்கிறதுதான். இப்ப காட்டுகளும் போய் அந்தக்காட்டுகள் தந்த சின்னச்சின்ன சந்தோஷங்களும் போய் கடைசியில தீர்வு வரும் தீர்வு வரும் எண்டு மட்டும் தீபாவளியைப் பாத்தபடி இருக்கிறம்...

இவ் வாரஇதழ் நல்லூர், No.68, Crossette lane, யாழ்ப்பாணத்திலுள்ள Green Media House (Pvt) Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.11.2023இல் வெளியிடப்பெற்றது.